புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# ஓம் இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

வீரோதிஹு (1889) வைகாசிமீ உஉ-ந் திகதி

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஹு வைகாசிமீ உகூஉ ( 1936 ஜூன் 11 ) வியாழக்கிழமை { இலக்கம்—கஅ

## "இணையற்ற எதியோப்பிய நக்ஷத்திரம்"

### 'அபிஸீனிய மதஹரி' வயிஜேரே மேனின் செய்த அரிய பணி

**சுந்தையணிந்து, சேற்றிற் புரண்டு, ஏழைமாதைப்போல் மாறுவேடம் பூண்டு இத்தாலியரிடம் மாற்றமறிந்து வந்த வீர நங்கை**

அபிசீனியாவின் அற்புத மங்கை! மாய மாது! சக்கரவர்த்தியின் ஏற்பாட்டைத் துரிதமாகச் செய்துமுடித்தவள், வயிஜேரோ மேனின் என்பவளாவள். அவளை இத்தாலியர், 'அபிசீனிய மதஹரி' என்று அழைத்தனர். அபிசீனியர் அவளை 'எதியோப்பிய ஜோன் ஆப் ஆர்க்" என்று அன்புடன் அழைப்பர். இங்கிலாந்திலும், பிரான்சிலும் படித்துத் தேறி, மேனாட்டு நடையுடை பாவனைகளால் ஐரோப்பிய சமூகத்தைத் தன் வயப் படுத்தினள் இவ்வழகி. இவள் எதியோப்பியாவில் மிகப் பழங் குடியில் பிறந்தவளாம். சாலமன் எனும் மன்னரே தனது மூதாதையென்று இவள்கூறிக்கொள்கிறள் இவளுக்கு அரசியலில் அத்யந்த ஆர்வம். ஹெயிலிஸெலாஸி, அபிசீனிய மன்னராக முடி சூட்டப்படுவதற்கு, வயிஜேரோமேனினுமிகமுக்கியமானகாரணமாயிருந்தாள். காலஞ்சென்ற கர்னல் லாரேன்ஸிடம், இம்மாது சில நாட்கள் ஏஜெண்டாக இருந்ததாக இத்தாலியர் கூறுகின்றனர். லாரேன்சிடமிருந்து பக்குவமாக இவள் அரசியற் சூழ்ச்சிகளைக் கற்றுக் கொண்டதாகவும், அபிசீனியச் சிற்றரசர்களில் பலரை, சக்கரவர்த்தியின் சார்பாகத் திரட்டிய பெருமை இவளுக்கேஉளது எனவும்கூறுகின்றனர். அபிசீனிய சக்கரவர்த்தி பட்டத்திற்கு வந்ததும், இவளுக்கு தர்பாரில் சிறந்த ஸ்தானம் கிடைத்தது. அன்று முதல் இன்றுவரை இம்மாது, சக்கரவர்த்திக்காக மிக ஆபத்தை விளைவிக்கக்கூடிய சேவைகள் பல புரிந்துள்ளாள்.

ஜினிவா சர்வதேச சங்கத்திலே, இத்தாலிமீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென விவாதிக்கப்பட்டு வந்த சமயத்தில் இத் தீர மாது, அங்கே பிரசன்னமாக இருந்தாள். தன் தேசத்திற்காகப் பரிந்துபேசி, ஆதாவு திரட்டினள். இச்சமயத்தில் சக்கரவர்த்தி, அவளை உடனே வரவேண்டுமென அழைத்தார், மிக முக்கியமான ஒரு வேலையாம். அதைச் செய்ய இப் பெண்மணியாலேதான் முடியுமாம். ஆகவே, அவள் ஜினிவாவிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டாள். சக்கரவர்த்தியார், எரிட்ரியாவில், இத்தாலியருக்குப் படைப்பலம் எவ்வளவு இருக்கிறதெனக் கண்டுபிடிக்கவே, வயிஜேரோ வரவழைக்கப்பட்டாள். ஆடம்பர ஆடைகளாலும், ஆபரணங்களாலும் மேனி மினுக்கி, பாரிஸ்போன்ற நாகரிக நகர வாசிகளினிடை ஜோதியாக விளங்கிய இம்மாது, கந்தை யணிந்து, சேற்றில் புரண்டு, அபிசீனிய ஏழை இழிகுல மாதைப்போல் மாறுவேடம் பூண்டு இத்தாலியப் பிரதேசத்தில் புகுந்து பார்த்தனளாம். அரசருக்குத் தேவையான தகவலை விசாரித்துக்கொண்டு வந்தாள். அதனால் அவருக்கு என்ன லாபம் கிடைத்தது என்பது வேறு விஷயம். இத்தாலியருக்கு இவள் மாறுவேடம் புனைந்துவருவது எப்படியோ தெரிந்துவிட்டது: ஆகவே அவளைக் கண்டுபிடிப்பவருக்கு ஏராளமான பரிசு அளிப்பதாக விளம்பரம் செய்தனர். கண்டவிடத்தில் அவ்விநாடியே அவளைச் சுட்டு வீழ்த்துங்கள் என இத்தாலிய அராங்கம் கட்டளையிட்டது. ஆனால் சாமர்த்தியசாலியான இம்மாது, அத்தனை இத்தலியரையும் எய்த்துவிட்டாள். அடிஸ் அபாபாவிற்குச் சென்று சக்கரவர்த்தியிடமிருந்து, 'எதியோப்பியர் நட்சத்திரம்' என்ற பட்டமும் பரிசும் பெற்றள். யுத்தத்தின் கடைசி காலத்தில் இம்மாது யுத்த களத்திற்குச் சென்று, போர் வீரர்களுக்கு ஆவேசமூட்டும் விதத்தில் பிரசங்கமாற்றி வந்தாள். தானே படைகளைத் திரட்டிக் கொண்டு மெஷின் துப்பாக்கிக் குண்டிறைத்தும், வெடிகுண்டிற்தும், கட்டைசேய்பாது இத்தாலியப்படைகளைத் தாக்கினளாம்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## தபால்பெட்டிக்கு வணக்கம்

### மலையாளி மணியார்டர் அனுப்பிய விநோதம்

ஹிந்துக்களின் வருஷப் பிறப்பை முன்னிட்டு ஓர் மலையாளி 10 ரூபாயைத் தனது உறவினருக்கு அனுப்ப விரும்பினன். ஆனல் மணியார்டர் கமிஷன் கொடுக்க அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே அவன் சிவப்புத் தபால் பெட்டி யொன்றினருகிற் சென்று அதை வணங்கிவிட்டு 10 ரூபாய் நோட்டை உள்ளே போட்டான். மறுபடியும் அதை வணங்கிவிட்டு அவன் திரும்பிச் சென்றன்.

15 தினங்களுக்குப் பின் பணம் ஊர் போய்ச் சேரவில்லை யென்று அவன் தபாலதிகாரிகளிடம் முறையிட்டுக்கொண்டான் என்றும் அதிகாரிகள் செவி சாய்க்கவில்லை யென்றும் ஓர் நிருபர் ஒரு பத்திரிகைக்கு எழுதுகிறார்.

## தென்னைப் பயிரின் வரலாறு

### அசுரன் தலையில் உற்பத்தியானதா?

### குசி என்ற அரசன் தெய்வத்தைஉபாஸித்துச் சிருஷ்டி செய்த மனிதனது தலையா?

[திரு. ஏ. குருசிங்கா எழதியது]

வெகு காலத்திற்கு முன் கிரேக்கர்கள் இக்காட்டிற்குவந்தபொழுது இலங்கை கடற்கரையில் காணப்படும் அழகிய தென்னஞ் சோலைகள் இக் காட்டின் விசேஷ லட்சணமென்று குறிப்பிட்டிருக்கிறர்கள். இன்னும் நெடுங் காலமாக இலங்கைக் கடற்கரையிற் தென்னஞ் சோலைக்குக் குறைவில்லை.

தென்னை இலங்கையிலும் இந்தியாவிலும் தொன்று தொட்டுப் பயிரிடப்பட்டு வருகிறதாயினும் ஆதியில் அது ஒரு அந்நிய நாட்டிலிருந்தே இங்கு கொண்டுவரப் பட்டது என்று கூறப்படுகிறது.

#### அசுரன்தலையில் உற்பத்தியா?

சப்த சாகரங்களுக்கப்பாற் கொல்லப் பட்ட ஒரு அசுரனுடைய தலையிலிருந்து தென்னை உண்டாயிற்றென்று சிங்களவர்களிடையே ஒரு கதை வழங்கி வருகிறது. இதிலிருந்து தென்னை அந்நிய நாட்டிலிருந்துதான் இங்கு கொண்டுவரப் பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அலைகளினால் தன் போக்கில் இங்கு கரை சேர்க்கப்பட்டுத் தென்னை உண்டாயிருக்கலாம். அப்படியாயின் இந்தியாவின் குமரி முனையிலிருந்து தென் மேற்குப் பருவக்காற்றில் அடித்துக்கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம்.

#### திருவாங்கூரில் வேறுகதை

தற்சமையம் தேங்காய் உற்பத்தியில் இலங்கையுடன் போட்டியிடும் திருவாங்கூர்ராஜ்ஜியத்தில்தென்னை ஆதியில் தோன்றியதைப் பற்றி வேறொரு கதை வழங்கிவருகிறது. குசி என்ற அரசன் பெரிய தெய்வத்தை உபாஸித்துத் தேவ கணங்களுக் கொப்பான சக்தி பெற்று இருந்தான். அவன் ஒரு சமையம் மிகப் பராக்கிரமம் பொருந்திய ஒரு மனிதனை சிருஷ்டிசெய்ய ஆரம்பித்தான். ஆனால் மற்றத் தேவகணங்கள் அதனால் கலக்கமடைந்து அவ்வாறு செய்ய வேண்டாமென்று அவனைக் கேட்டுக் கொண்டதால் அவன் தான் சிருஷ்டிசெய்த தலையைப் பலவகையில் பயனளிக்கக்கூடிய தேங்காயாகமாற்றிவிட்டானும். ஆதியில் குசிதராஜா என்ற இந்தியஅரசனே இக்காட்டில் தேங்காயின் உபயோகத்தை ஜனங்களுக்குத் தெரிவித்ததாக ஒரு கதை இருந்துவருகிறது.

#### மகாவம்சம் கூறுவது

இலங்கையின் ஆதிசரித்திரமாகிய மகா வம்சத்தில் தென்னையைப்பற்றிப் பலவிடங்களில் கூறப்பட்டிருக்கிறது. கி—மு இரண்டாவது நூற்றாண்டில் அரசுபுரிந்த துட்டகமுனு அரசன் ருவான் வெலி டகோபா கட்டுவதற்குச் சுண்ணாம்புடன் செவ்விளநீரையும் சேர்த்து உபயோகித்ததாக மகா வம்சம் கூறுகிறது. ஆனால் கி-பி. 1153ல் முதலாவது பராக்கிரமாவின் ஆட்சி ஏற்படுவதற்கு முன் தேங்காய் இக்காட்டில் உணவுப் பொருளாக உபயோகிக்கப்பட்டதென்று

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஒருவரம்

இராகம் - சகானு—தாளம் - ரூபகம்

பல்லவி.

இந்த ஒருவரம் தந்தருள் புரிகுவை
ஈசா ஆ ஜெக தீசா

அநுபல்லவி.

எங்கெந்தப் பொருளிலும் சந்ததம் பொலிகின்ற
ஏகனே சர்வ போகனே
பாகனே உயர்த் யாகனே எனக்கு (இந்த)

சரணங்கள்.

1. உண்ணவும் உடுக்கவும் அந்நியருதவியை
எண்ணிடல் நீக்கிய கண்ணிய வாழ்க்கையே
இன்பமானதென் றென்போன் நாட்டினர்
அன்பினற்கண்டு துன்பம்நீங்கிடும் (இந்த)

2. என்னை வளர்த்தெடுத்த அன்னையிந்தியநாடு
முன்னைய நிலைபெற்று உன்னதமடைந்திட
எந்தனுல்முடி கின்றமாத்திரம்
சொந்தமாயவள் தொண்டுசெய்திடும் (இந்த)

3. வல்லானொருவனென்று நல்லாரறிந்தபடி
எல்லா மதத்தினரும் சல்லாபித் தொன்றுபட்டு
இந்தநாடே றந்தயாவரும்
சொந்தமாகக் கலந்து வாழ்ந்திடும் (இந்த)

4. ஓதிய பெருமையில் நீதியில் நடத்தையில்
க்யாதியில் ஆனதன்றி ஜாதியிற் சிறியவர்
யாருமேயிலை கூறுமேமறை
பாரதத்தினர் தேறுமாறுசெய் (இந்த)

— வரும்

—நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை

# காங்கேசன் துறைக் கத்திக் குத்து வழக்கு

## நடராசா என்பவர் கூறிய சாக்ஷியம்

[ நமது நிருபர் ]

மல்லாகம் பொலிஸ் கோட்டில் சென்ற 8-6-36 திங்கட்கிழமை காங்கேசன்துறையில் வசிக்கும் வயிரமுத்து - சுப்பிரமணியம் அவ்வூர் அண்ணாமலை - நடராசாவை ஓர் கோப்பிக் கத்தியால் சென்ற சித்திரை௴ 20-ம் திகதி பிற்பகல் 10 மணியளவில் மார்பில் குத்திக் காயப் படுத்தியதாகக் குற்றஞ் சாட்டித் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக எச். ஆர். அரிய குட்டியும் எதிரி சார்பாக திரு. ரி. சி இராசரத்தினமும் சாப் சபாபதியும் வாதித்தனர்.

ஏ நடராசா கூறிய சாட்சியமாவது:-

எனக்கு ஓர் கடையுண்டு. இக்கடைக்குப் பக்கத்தில் தான் சாமுவேல் அப்பு கடைவைத்திருக்கிறான். என்னுடைய கடையில் சாய்ப்புச் சாமான்கள் தான் வைத்திருக்கிறேன். சாமுவேல் அப்பு கோதுமை அப்பமும் தேநீரும் விற்கிறவன். எதிரியும் சாய்ப்புச் சாமானும் தேநீரும் விற்கும் ஒரு கடையும் வைத்திருக்கிறான். குறித்த தினத்தன்று இரவு நான் கடையில் இருக்கும் போது ஓர் சத்தம் கேட்டது. இச் சத்தம் சாமுவேல் அப்புவின் கடையிற்றான் கேட்டது. நான் எனது கடையிலிருந்து என்ன நடக்கிறதென்று அவதானித்தேன். அப்போது சுப்பிரமணியம் சாமுவேல் அப்புவின் கடைக்குத் தேநீர் குடிக்க வந்த சிலருக்கு அடித்ததைக் கண்கண்டேன். அப்பொழுது சுப்பிரமணியத்தின் மனைவி என்னிடம் வந்து பள்ளன் மணியத்துக்கு அடிக்குமுன் அவரைக் கூட்டி வரும்படி கூறினள். இதற்கிடையில் சாமுவேல் அப்பு சுப்பிரமணியத்தைப் பார்த்து "ஏன் எனது கடையில் தேநீர் குடிக்க வந்தவர்களுக்கு அடிக்கிறாய்" என்று சொல்லி அவரைக் கடைக்கு வெளியே தள்ளிக்கொண்டு வந்து விட்டார். நான் சாமுவேல் அப்புவின் கடைக்குச் சென்று "ஏன் தேநீர் குடிக்க வந்தவர்களுடன் தொந்தரவுக்குப் போகிறாய்" என்று சொல்லிவிட்டு ஆளைப் பிடித்து அனுப்பிவிட்டேன். இவர் போனதும் தேநீர் குடிக்க வந்தவர்களைப் பார்த்து "ஏன் நீங்கள் இந்த நேரத்தில் வந்தீர்கள். எங்கிருந்து வருகிறீர்கள்" என்று கூறிக்கொண்டு நிற்கும் போது சுப்பிரமணியம் திரும்பி வந்து என்னைப் பார்த்து "நீயும் பள்ளருடன் சேர்ந்து எனக்கு அடிக்கப் பார்க்கிறாயோ? என்றான். நான் எனது கடைக்குச் சென்று கடைக்கதவைத் திறந்தேன். இதற்கிடையில் எதிரி என்பிறகே வந்து ஓர் கத்தியால் மார்பில் குத்தினார். அப்போது தான் நான் மறுபக்கம் திரும்பினேன். நான் எனது கடைக்குப் போனபோது எதிரியைப்பார்த்து "நீ குடித்தால் வீட்டில் போய் நித்திரை செய்" என்று சொன்னேன். நான் குத்து விழுந்ததும் எதிரி குத்தினதாகச் சத்தம் போட்டுவிட்டு விழுந்துவிட்டேன். எனக்கும் எதிரிக்குமிடையே முன் ஒருவித கோபதாபமுமிருந்ததில்லை. அவர்கள் வாக்குவாதப்பட்ட சத்தமே முதன் முதல் எனது கவனத்தை அவ்விடம் இழுத்தது. இந்த நேரத்தில் நான் எனது கடையைச் சாத்திவிட்டேன. ஆனால் பூட்டவில்லை. சாமுவேல் அப்புவின் கடைக்குத் தேநீர் குடிக்கவந்தவர்களை எனக்கு முன் தெரியாது. அவர்கள் றோட்டில் நின்றார்கள். இவர்களுள் ஒருவன் மல்லாகத்தில் வசிக்கும் கிருஷ்ணன் என்று சொன்னான். கிருஷ்ணன் தனது மச்சான் வேலனுக்குச் சுகமில்லை என்றும் அவனைப் பார்ப்பதற்காகவே தான் அவ்விடம் வந்ததாகவும் கூறினன். கடையில் ஒரு விளக்கும் றோட்டுக்கான் பக்கத்தில் ஒரு விளக்கும எரிந்துகொண்டிருந்தன. சுப்பிரமணியத்தின் கையில் அந்த நேரத்தில் ஒன்றும் காணவில்லை. பள்ளருக்கு ஓர் பனை ஓலையால் சுப்பிரமணியம் அடித்தார். இச்சம்பவம் நடக்குமிடத்துக்குக் கிட்ட அநேகர் குடியிருக்கிறார்கள் ஒருவரும் இச்சம்பவம் நடந்த இடத்துக்கு வரவில்லை. எதிரி இரண்டாம் முறை வந்தபோது கையில் கத்தி வைத்திருந்ததாக நான் காணவில்லை. கத்தி முதுகில் ஏறினதும் நான் கத்தி என உணர்ந்தேன். எதிரி வந்தபோதும் நான் மறுபக்கம் திரும்பினேன். நான் அப்படித் திரும்பியபொது எதிரியைச்சரியாகக் காணவில்லை. அங்கே இழுபறிப்படவில்லை. எதிரியை ஒருவரும் அமர்த்திப்பிடிக்கவில்லை.

வழக்கு வருகிற 10-6-36க்குத் தவணைபிடப்பட்டது.

## தென்னைப் பயிரின் வரலாறு.

---

(1-ம் பக்கத் தொடர்)

ஓரிடத்திலும் குறிப்பிடப்படவில்லை "தற்காலத்தில் சிங்களவரின் உணவுப் பொருட்களில் தேங்காய் வெகுவாக உபயோகிக்கப்பட்டு வருகையில் அந்த காலில் இதைப்பற்றி ஒன்றும் கூறப்படாமலிருப்பது விநோதமாகவே யிருக்கிறது."

### உணவில் முக்கிய உபயோகம்

தேங்காய் சிங்களவர்களின் உணவில் முக்கியமானஸ்தானம் வகித்து வந்திருக்கிறது. தேங்காயெண்ணெய்தான் விளக்குகளுக்குப் பிரதானமாக உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. 16 - வது நூற்றாண்டில் போத்துக்கீயர் இக் காட்டிற்கு வந்த பொழுது இலங்கையின் மேற்குக் கரையிலும் தென் கரையிலும் ஏராளமான தென்னந் தோப்புக்கள் இருந்தன. அக்காலிற் கண்டி மன்னர்களுடன் அடிக்கடி நேர்ந்த சண்டைகளில் இருதரப்பிலும் எதிரியின் தென்னந் தோப்புக்களை அழிப்பது வழக்கமா யிருந்திருக்கிறது. ராஜசிங்க மன்னனுடைய சேனை கொழும்பின் மீது படையெடுத்துச் சென்றபொழுது வீரர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்காகத் தேங்காய் ஓடுகள் கொடுக்கப்பட்டனவென்று சரித்திரம் கூறுகிறது. கண்டி அரசர்கள் தென்னையை மிகச் சிரத்தையுடன் வளர்த்து வந்திருக்கிறார்கள். அவர்களும் போர்த்துக்கீயரும் தென்னையை வெட்டுவது ஒரு குற்றமென்று உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

### டச்சுக்காரர்களின் முயற்சி

தேங்காயிலிருந்து எண்ணெயும் சாராயமும் உற்பத்தி செய்யப்பட்டதிலிருந்து தென்னை அதிகமாகப் பயிர் செய்யப்படலாயிற்று. இதன் மூலம் தோட்டக்காரர்களுக்கு வருமானமும் அரசாங்கத்திற்கு வரியும கிடைத்து வந்திருக்கிறது. எனினும் போர்த்துக்கீயர் காலத்தில் தென்னை மிக முக்கிய ஸ்தானம் வகிக்கவில்லை யென்று தெரிகிறது. ஏனெனில் மாட்ஸ்யூகர் என்ற போர்த்துக்கீய கவர்னர் தமக்குப் பின் வந்தவரிடம் கறுவா, யானை, கொட்டைப்பாக்கு ஆகியவைகளை மிக்க அவதானத்தோடு பாதுகாக்கும்படி கூறினாராயினும் தென்னையைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. டச்சுக்காரர்கள் தான் இக் காட்டில் தென்னையை மிகவும் பரப்பினர்கள் தென்னையி லிருந்து வடிக்கப்படும் சாராயத்திற்கு அதிகக் கிராக்கி ஏற்பட்டதால், கடற்கரை நீளம் சாராயம் காய்ச்சுமிடங்கள் பல ஏற்பட்டன. இச் சாராயம டச்சுத் துருப்புக்களுக்கும் கப்பல் வியாபாரிகளுக்கும் விற்கப்பட்டன.

1796ல் ஆயிரம தேங்காயின் விலை ருபாய் 9வரை உயர்ந்த தென்று தெரிகிறது.

### வரி உயர்வுக்கு எதிர்ப்பு

போர்த்துக்கீயரைப் போலவே டச்சுக்காரர்களும் தென்னைக்கு வரி வாங்கி வந்தனர், ஆயின், இவர்கள் வரியை உயர்த்த முயற்சித்த பொழுது பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டதால் அந்த யோசனையை உடனேகைவிடவேண்டியதாயிற்று. டச்சுக்காரர்கள் காலத்தில் தேங்காய் ஏற்றுமதி வியாபாரமும் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு சமயம யாழ்ப்பாணத்தில் வரட்சி ஏற்பட்டதால் தென்னை சரியாகப் பலன்கொடுக்கவில்லை. காட்டிலிருந்து பிடித்து வரப்பட்ட ஏராளமான யானைகளுக்குத் தென்னோலையை ஆகாரமாகக் கொடுக்க வேண்டியதா யிருந்தது. இலங்கையின தேங்காய் ஏற்றுமதி இதனுல் நின்று போயிற்று. டச்சுக் கமபெனிக்கு வேண்டிய தேங்காய் எண்ணெயும மலையாளத்திலிருந்து இறக்குமதி செய்யவேண்டியதாயிற்று.

டச்சுக்காரர்களின் காலத்தில் தென்னையி லிருந்து எண்ணெய் தேங்காய்ப்பால், பாய், அடைப்பம, கயிறு முதலிய பல பொருட்களும் கிடைக்கப் பெற்றனவென்று வெளியாகிறது.

### புத்துயிர் பெறுமென்ற நம்பிக்கை

இக் காட்டில் தென்னைக்கு வாழ்வும் தாழ்வும் மாறி மாறி யேற்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது ஜனங்கள் தென்னையின் பலவித உபயோகத்தை மறுபடி உணர ஆரம்பித்திருக்கின்றனர். 1910-ல் ரப்பர் விலை ஏறியவுடன் பலர் தென்னை மரங்களை வெட்டிவிட்டு ரப்பர் பயிரிட்டனர். கடலை எண்ணெய் முதலிய பொருட்கள் தேங்காய் எண்ணெய்க்குப் போட்டியாக ஏற்பட்டுவிட்டன. ஆயினும் இலங்கைக் கொப்பராவும் தேங்காயெண்ணெயும் எப்பொழுதும் உலகின் நன்மதிப்பைப் பெற்றுவந் திருக்கிறது. இப்பொழுது தெங்குப் பொருள் போர்ட்டின் முயற்சியால் இந்த முக்கியமான தொழில் புத்துயிர்பெற்று வளருமென்று எதிர்பார்க்கிறோம்.

## மறவன்புலோ இந்துவாலிபர் சங்கம்

---

ஷை சங்கத்தின் விசேஷ கூட்ட மொன்று தாது ஆண்டு வைகாசித் திங்கள் 22ம்நாள் (4-6-34) வியாழக்கிழமை மாலை 7 மணியளவில் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் சங்க அக்கிராசனர் திரு. நா. பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் தலைமையின்கீழ் தேவாரபாராயணத்தோடு ஆரம்பமாயது. பின்னர்,

1 வது சென்றகூட்ட அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றது.

2 வது "சங்க வளர்ச்சிக்கு இன்றியமையாதன" என்னுந் தலையங்கத்தைக் கொண்டதோர் அரிய பெரிய விஷயமொன்று எழுதி வாசிக்கப்பட்டது.

3 வது அரசியல் விஷயங்களையும் சமய விஷயங்களையும் நாட்டு முன்னேற்றங்கருதிய விஷயங்களையும் தன்னகத்துக்கொண்டு திகழும் சங்கப் பத்திரிகையாகிய "இந்து வாலிபா கேசரி" வாசிக்கப்பெற்றது.

4 வது மும்மொழிப்பயிற்சி வல்லுநரும் "காதண்ட" வாசருமாகிய பிரம்ம ஸ்ரீ கு. யோகானந்தீஸ்வரக் குருக்கள் அவர்களால் "மானிட தேகத்தின் லட்சியம்" என்னும் விஷயம் சொற்சுருக்கம் பொருட்பெருக்கமுற அரிய பெரிய வசன நடையில் பேசப்பட்டது. பின்னர் அவையோர் பலரினதும், தலைவரினதும் குறிப்புரைகளோடும் தேவார பாராயணத்தோடும் கூட்டம் 10 மணியளவில் இனிது நிறைவேறிற்று. —கடித.

## பாலர் பகுதி

# கிளி செய்த உதவி

### அருமை மருமக்காள்!

'தன்னைப்போலப் பிறரையும் நேசி' என்பது பெரியோர் வாக்காகும். ஆதலால், நீங்கள் உங்களைப்போலவே மற்றவர்களையும் நேசிக்க வேண்டும். மனிதரை மாத்திரமல்ல, மிருகம் பறவை முதலியவற்றையும் நீங்கள் நேசிக்கவேண்டும். அவற்றை இம்சிக்கக் கூடாது. பிறர் நம்மை இம்சிக்கும்போது எவ்வாறு எமக்குத் துன்பம் உண்டாகின்றதோ அவ்வாறே பறவைகள் மிருகங்களையும் நாம் இம்சிக்கும்போது, அவைக்கும் துன்பம் உண்டாகின்றது. மனிதரைப் போலவே அவையும் தமக்கு நன்றி செய்தவர்களுக்கு ஏதோ ஒரு விதமாக நன்றி செய்கின்றன ஒரு சிறுவனுக்கு ஒரு கிளி செய்த உதவியைப் பின்னே வருங் கதை மிக நன்றாகக் காட்டுகின்றது. அக் கதையை அவதானித்துக் கேளுங்கள்.

ஒரு காட்டில் ஒரு முனி தவம் செய்துகொண்டிருந்தார். அவர் அடிக்கடி, "விடுதலை எப்போது, விடுதலை எப்போது கூட்டிலுள்ள கிளிக்கு விடுதலை எப்போது? சிறையிலுள்ள கைதிக்கு விடுதலை எப்போது? உடம்பிலுள்ள ஆத்மாவுக்கு விடுதலை எப்போது? விடுதலை எப்போது, விடுதலை எப்போது?" என்று தவிப்பது வழக்கம்.

அவரது ஆச்ரமத்தருகில்ஒரு மரத்தில் ஒரு ஆண் கிளியும் பெண்கிளியும் வசித்து வந்தன. ஆண்கிளிக்கு நகரங்களில் போய் இரைதேட வேண்டுமென்று ஆசை, பெண்கிளி "நகரத்தின்பக்கமே போக வேண்டாம். அவை துஷ்டர்கள் வசிக்குமிடம். பல துன்பங்களைப் பார்க்கவேண்டிவரும். நம்மையே யாரேனும் பிடித்துக் கொள்வார்கள்' என்று புத்தி புகட்டி வந்தது: ஒருநாள் ஆண்கிளி ஆசைமிகுதியால் சொல்லிக்கொள்ளாமல் பக்கத்து ஊருக்குப்போனது. அங்கே குப்பன் என்றஒருவன் அதைத் தந்திரமாகப்பிடித்து விட்டான்.

அவனுடையதாயார் கூட்டிலிருக்கும் கிளியைக் கண்டு மனம் வருந்தி, "நமக்கு ஏனப்பா இந்தப் பாவம்? இதைத் திறந்துவிட்டுவிடு. கிளி சுகமாய்த் திரியட்டும்" என்று சொல்லுவாள்.

அதற்குக் குப்பன் "இதற்கென்னம்மா இப்பொழுது சுகக்குறைவு? உட்கார்ந்த இடத்தில் சோறும் பழமும் கிடைக்கிறது பூனை, கழுகு முதலிய துஷ்டஜந்துக்களின் பயமுமில்லை. கழுத்தில் எவ்வளவு அழகான பாசியும் காலில் 'ஜில் ஜில்' என்று எவ்வளவு இனிமையான சலங்கைகளும் போட்டிருக்கிறேன்! இதெல்லாம் இதற்குக் காட்டில் இருந்தால் கிடைக்குமா?" என்று பதிலளிப்பான்.

"என்னமோ அப்பா! எனக்குப் பாவமாகத் தோன்றுகிறது!" என்றுசொல்லி, சரியானபதில் தோன்றுமல் தவிப்பாள்.

சில நாட்களுக்குப் பிறகு ஊரில் நடந்த ஒரு கலகத்தை ஒட்டிப் பல பேர்களுடன்குப்பனும் கைதியாக்கப்பட்டான். ராஜா அவனை விசாரித்து விட்டுச்சிறையிலடைக்கும்படி உத்தரவிட்டார்.

குப்பனுக்குச் சிறைவாசம் வெகு கஷ்டமாக இருந்தது, அதிலும் அவன் ஒரு குற்றமும் செய்யாதிருந்ததால், தண்டனையைச் சகிப்பது பன்மடங்குகஷ்டமாக இருந்தது. அடிக்கடி வீட்டைப்பற்றி நினைத்து கவலைப்படுவான். மற்ற நினைவுகளோடு கிளியின் நினைவும் வரும். ஒரு நாள் இவ்வாறு நினைத்துக்கொண்டிருக்கும்போது தன் விலங்குகளின்மீது கவனம்சென்றது. அப்போது அவன், "ஆஹா! கிளிக்குப்போட்ட ஆபரணங்களுக்காக அது எனக்குநன்றி காட்ட வேண்டுமென்று நினைத்தேனே! கிளிக்கும் அவை விலங்குகள் போல் வெறுப்பாகத்தானே இருக்கும்" என்று நினைத்து அழுதான்.

ஒருநாள் குப்பனுடைய தாயார் கிளி பேசுவதைக் கண்டு தலை நிமிர்ந்து பார்த்தாள். கிளி வெகு தெளிவாக 'விடுதலை எப்போது, விடுதலை எப்போது, கூட்டிலிருக்கும் கிளிக்கு விடுதலை எப்போது?" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தது. அவள் வேகமாய்ச் சென்று கூட்டைத் திறந்து, கிளியை அன்புடன் முத்தமிட்டுக் கொண்டு "நீ உன் இஷ்டப்படி ஓடியாடித்திரி, கிளியே! உன்னைக் கட்டிப்போட்ட பாவம் தானே என் பிள்ளையைப் பாதிக்கிறது" என்று சொல்லி அதை வெளியே விட்டுவிட்டாள். அது சிறிது நேரம் தத்தித் தத்தி நடந்து விட்டுப் பிறகு பறந்துசென்று விட்டது.

ராஜா அரண்மனை மாடியில் தன் ராணியுடன்பேசிக்கொண்டிருந்தான்; அப்பொழுது ஒரு கிளி பக்கத்தில் இருந்த ஒரு பூச்செடியின்மேலுட்கார்ந்து, "விடுதலை எப்போது விடுதலை எப்போது, சிறையிலிருக்கும் கைதிக்கு விடுதலை எப்போது?" என்று தெளிவாகப் பலமுறை சொல்லிற்று.

ராணி, "இதென்ன அதிசயமாக இருக்கிறது. எனக்கும் வயது 50 ஆகிறது; இதுவரை இந்தமாதிரி வேடிக்கையைக் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை; யாரையாவது அநியாயமாகச் சிறையில் போட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

அதற்கு அரசன், "இந்தக் கலகக்காரர்களைத்தான் போட்டிருக்கிறேன். அவர்களில் சிலர் குற்றமற்றவர்களாயு

தொடர்ச்சி 6ம் பக்கம்.

# தேசாதிபதியின் யாழ்ப்பாண விஜயம்

## வயோதிபர் விடுதித் திறப்பு விழா

## 'மன்னர்பிரான் மனக்கருத்துக் கேற்ற ஞாபகச் சின்னம்'

(நமது விசேஷ நிருபர்.)

நேற்று முன்தினம், இலங்கைத் தேசாதிபதி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்திருந்தார். காலை 9 மணியளவில், அவர் காங்கேசந்துறைக் கடற்கரைக்கருகாமையிலுள்ள வைத்தியர் தம்புவின் கட்டிடத்தில் ஏற்படுத்தப்பெற்றுள்ள வயோதிபர் விடுதியைத் திறந்து வைத்தார். இவ்விடுதி ஜார்ஜ் ஜோர்ஜ் மன்னரது வெள்ளிவிழா ஞாபக சின்னமாக ஏற்படுத்தப்பெற்றுள்ளதாம். விடுதிக்கு இட்டுச் செல்லும் தெரு மிக அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மேற்படி விடுதியை ஸ்தாபித்த கமிட்டியின் தலைவராகிய நீதிபதி திரு. C. குமாரசுவாமி அவர்கள் தேசாதிபதி அவர்களை வரவேற்று மாலை சூட்டி மேளவாத்தியத்தோடு அழைத்துச் சென்றார்.

திரு. குமாரசுவாமி அவர்கள் தாம் மேற்படி கமிட்டியின் தலைவர் என்ற முறையில் தேசாதிபதி அவர்களை அவ்விடுதியைத் திறந்துவைக்கும்படி வேண்டிக்கொள்வதாகவும் அவ்விடுதி மன்னர் வெள்ளிவிழாவின் ஞாபகமாக ஏற்படுத்தப்பட்டதென்றும், கூறி அவ்விடுதி ஏற்படுத்தப்பெற்ற வரலாற்றை எடுத்துக் கூறினார்.

அடுத்தபடியாகக் காரியதரிசியாக திரு. ... சோமசுந்தரம் அவர்கள் தமது ...கையைப் படித்தார்.

அதன் ...ன், தேசாதிபதியவர்கள் பின்வருமாறு சொற்பொழிவாற்றினார்:—

உங்கள் வரவேற்பை நான் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். இன்னும் ஒரு வரவேற்பு எனக்கு யாழ்ப்பாணத்தில் இருப்பதால் இவை இரண்டையும் ஒருங்கே ஒரு நாளிற் செய்யவேண்டியிருக்கிறது. சந்தோஷத்திற்குரிய சம்பவமாகும். நீங்கள் மகிமை வாய்ந்த ஜார்ஜ் மன்னருக்கு ஞாபகசின்னம் ஏற்படுத்தியமை எனக்கு மிக்க மகிழ்ச்சி பயக்கின்றது. அதிலும் நீங்கள் ஞாபகசின்னமாகக் கொண்டுள்ள இம்முறை மிகவும் பாராட்டத்தக்கது.

காலஞ்சென்ற நமது மன்னர் ஏழைகள் மீது அதிக இரக்கமுடையவராயுள்ளவர். இத்தகைய ஒரு ஞாபகசின்னமே அவருக்கும் விருப்பமாயிருந்திருக்கும்.

இவ்விடுதி யாழ்ப்பாணத்திலுள்ள ஏழைகளுக்குப் பெரிதும் பயன்படக்கூடியதாயும் மன்னர்மீது யாழ்ப்பாண மக்களுக்குள்ளபற்றை வளர்ப்பதாயும் இருக்குமென்று நம்புகின்றேன். ஆகவே நான் அகமகிழ்ச்சியோடு இதனைத் திறந்து வைக்கின்றேன்."

இதன் பின்னர் தேசாதிபதி அவர்கள் வெள்ளிக் கத்தரிக்கோல் ஒன்று அளிக்கப்பெற்றார். அதனைக் கொண்டு கட்டியிருந்த நாடாவை வெட்டி விடுதியைத் திறந்து வைத்து அதனைச் சுற்றிப் பார்வையிட்டார். அதனோடு கூட்டம் கலைந்தது.

தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் திரு ஆர். ஆர். நல்லையா அவர்களது இலவசத்திற போஜன மருந்தினார்.

மாலையில், நகர...பைப் புதுமண்டபத்தை அவர் திறந்து வைத்தார். அதன் விவரங்களைப் பிறிதோரிடத்திற் காண்க.

# பத்திரிகைகளை நடத்தும் முறை

## ஸ்ரீமான் எம். கே. போஸ் சொற்பொழிவு

"நிர்வாகசக்தித் திறமை, ஆசிரியத் திறமை, சமாசாரங்களை எழுதும் திறமை, ஆசிரியர் பத்திகள் எழுதும் முறை உட்பட எல்லாப் பிரிவுகளிலும் திறமையாளர் வேண்டும்"

சின்னாட்களுக்கு முன் கல்கத்தாவில் ஸ்ரீமான் எம். கே. போஸ் ஒரு பிரசங்கஞ் செய்தார். அப் பிரசங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:—

"இந்தியாவிலும் பிரிட்டனிலும் படித்த வகுப்பாரின் தொகை சமம். (ஏறக்குறைய ...கோடி) ஆங்கிலந் தெரிந்தவர்கள் (இந்தியாவில்) 40 லட்சம். இவர்களிடம் பத்திரிகை படிக்கும் வழக்கம் இருந்தால் நம் தேசத்துப் பத்திரிகைகள் இப்போதுள்ளவை போலிருக்கமாட்டா. படிக்கத் தெரிந்தவர்களில் பெரும்பான்மையோர் பத்திரிகை வாங்கத் தகுதியுள்ளவர்கள் ஆனால் அவர்களுக்கு மனமில்லை. பத்திரிகைகள் அவர்களைப் போதுமான அளவு வசீகரிக்கவில்லை.

"ஆதலால் வசீகர சக்தியே பத்திரிகைகளை அதிகமாகப் பரவச்செய்யும் சாதனம் என்பது ஓர் உண்மை. மொத்தமாக விஷயங்களை நிரப்புவதால் மிகச் சிலரே பத்திரிகைகளை விரும்பக்கூடும். ஆல்பிரட் ஹார்ம்ஸ்வொர்த (லார்டு நார்தக்ளிப்) டெயிலி மெயில் என்ற தினசரியை எட்டே பக்கங்களுடன் தொடங்கினார் ஆயினும் மனிதரை வசீகரிக்குமாறு அதிக விஷயங்களை அதற்குள் அடக்கினார். விளங்கவைக்கும் தலைப்புகள், சுருக்கமாக அடங்கிய வியாசங்கள், செய்திகள் முதலியவையும் வசீகரமான ஒழுங்கும் வரிசையும் ஆகிய எல்லாம் மற்றப் பத்திரிகைகளைவிட இதற்கு ஏற்றத்தைக் கொடுத்துவிட்டன. நம் நாட்டில் பத்திரிகைகளைத் தோற்றுவித்தவர்களில் பலர், படித்தவர்களும் தேசபக்தி மிகுந்தவர்களுமாவர். ஆனால் அவர்கள் தொழில் முறையில் அனுபவமும் அறிவும் உடையவர்களல்லர். பத்திரிகைத் தொழிலை இத்தேசத்தில் தோற்றுவித்த பெருமை இவர்களுக்கே உண்டு. தற்காலம் இந்தியாவிலும் பத்திரிகைத் தொழில், பயன் கொடுக்கும் வழியில் வளர்ச்சிபெற்று வருகிறது. மற்றத்தொழில்களைப் போலவே நிபுணர்களின் உதவி இதற்குத் தேவை. நிர்வாக சக்தித் திறமை, ஆசிரியத்திறமை, சமாசாரங்களை எழுதும் திறமை, ஆசிரியர் பத்திகள் எழுதும் திறமை, புரூப் படித்துத் திருத்தும் திறமையுட்பட எல்லாப்பிரிவுகளிலும் திறமையாளரைப் பத்திரிகைத் தொழில் அபேட்சித்து நிற்கிறது. முதல் போட்டுத் தொடங்குவது மாத்திரம்போதாது.

"உலகிலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகளில்தான் இத்தொழில் மிக உன்னத நிலையை அடைந்திருக்கிறது. ஐரோப்பாவில் கூட அதற்குச் சமமாக ஏற்படவில்லை. முதன்முதல் 1878-ம் வருஷம் மிசௌரி சர்வகலாசாலையில் இக்கல்வியும் ஸ்தாபிக்கப்பட்டது. கொலம்பியாவில் பத்திரிகைத் தொழிலுக்காக ஒரு சர்வகலாசாலை பத்து லட்சம் டாலர் மூலதனத்துடன் ஒரு பிரபல பத்திராசிரியரால் ஏற்படுத்தப்பட்டது."

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

பங்கஜம் பள்ளிக்கூடத்திற் பயிலுங் காலத்திற்றானே கல்வியறிவு ஒழுக்கம் அழகு நடை யென்னும் இவைகளில் ஏனைய பிள்ளைகளைக் காட்டிலுஞ் சிறந்தவளானாள். இராமசாமிப்பிள்ளை தம் மகளுக்குச் சங்கீதமும் பயிற்றுவித்தார். இங்ஙனமாகப் பங்கஜம் மேல்வகுப்பிற் படித்து வருங்காலத்திற் பெரிய பெண்ணானாள்; மங்கைப் பருவமடைதலும் இராமசாமிப்பிள்ளை தங்கள் குலாசாரப்படி தம் மகளைப் படிக்கப் போகாமற் றடுத்து வீட்டிற்றானே வைத்துக் கொண்டார். அந்தக் காலத்தில் அவள் ஏதும் நல்ல நூல்களை வாசித்தல், வீட்டுவேலைகளைச் செய்தல் தன் வீட்டிற்கு யாரும் நல்லார் பெரியார் வந்தால் அவர்களை உபசரித்தல் இப்படியான கருமங்களைச் செய்து நல்லமுறையிற் பொழுதுபோக்கு வாளாயினாள். சயாத இராமசாமிப் பிள்ளையும் பங்கஜத்தின் போதனையைக் கேட்டும் சாதனையைக் கண்டும் மெல்ல மெல்லத் தான தருமஞ் செய்யத்தொடங்கினார்.

* * *

இவை இங்ஙனமாக, பல இடங்களிலிருந்து பங்கஜத்திற்கு, கலியாணத்தரகர்மார் மணம் பேசி வரத் தலைப்பட்டனர். அப்படி வருந் தரகர்மார் எவருக்கேனும் இராமசாமிப்பிள்ளை ஒரு முற்றுச் சொல்லாமற் கடத்தி வந்தார். இதற்கிடையில் வீட்டில் அணிந்து கொள்வதற்கான ஆபரணங்கள், விசேஷ காலங்களில் தரித்துக் கொள்வதற்கான இரத்தினாபரணங்கள், விதம் விதமான விலையுயர்ந்த சேலைகள் முதலிய இவைகளையெல்லாம் பருவதம் காலந்தோறும் சொல்லச் சொல்ல இராமசாமிப்பிள்ளை செய்வித்தும் வாங்கியுங் கொடுத்து வந்தார். தங்கள் பிள்ளைக்கு விரைவிற் கலியாணஞ் செய்து அதன் சீர் சிறப்பைப் பார்த்து விடவேணு மென்பதுதான் பெற்றார் மனத்திற் கொண்ட பேராசை. இதனைப்பற்றிப் பருவதம் பல முறையும் தன் நாயகனுக்குச் சொல்லுவாள்; ஆனால் அதற்கு அவர் "நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம் விதியின் பயனேபயன்" என்று சொல்லிக் கொள்ளுவார்.

* * *

இப்படியிருக்க ஒரு ஞாயிற்றுக்கிழமை பங்கஜம் "தலை வலிக்கிறது, உடம்பு உளைகிறது" என்று சொல்லிக் கொண்டு போய்ப் படுத்து விட்டாள். தாய் தன் பிள்ளை படுத்துக் கிடப்பதைக் கண்டாள்; முன்னெருபோதும் தன் மகள் அப்படிப் படுத்துக் கிடந்தவளல்லளாதலின் ஓடிப் போய் அவளைத் தொட்டுப் பார்த்தாள்; காய்ச்சல் நெருப்புப்போற் காய்வதை உணர்ந்தாள்; பதைபதைப்போடு தன் கணவனுக்குச் சொன்னாள் இராமசாமிப் பிள்ளைக்கு இவ்வளவும் போதாதா? தாமும் ஓடிவந்து பார்த்தார்; அதிக சுரம் இருப்பக் கண்டார். சிறந்த டக்டர்மார் தமிழ் வைத்தியர் பலரையும் அழைப்பித்தார்; அவர்கள் எல்லாரும் ஒவ்வொருவராய்ப் போய்ப் போய்ப் பங்கஜத்தைப் பார்த்துவிட்டு, அதிக கவலையோடு மீண்டுவந்து ஒருங்கு யோசித்தார்கள். வைத்தியர்களின் முகக் குறிப்பைக்கண்ட இராமசாமிப்பிள்ளை சஞ்சலங் கொண்டு "ஒன்றையும் ஒளிக்காமல் உள்ளதைச் சொல்லுங்கள்; என் பிள்ளைக்கு என்ன நோய்; நீங்கள் ஏன் அதிகம் யோசிக்கிறீர்கள்; ஏதும் அசாத்தியமான ரோகமா? ..............." என்று பரபரப்புடன் கேட்டார். "நோய் பொல்லாத நோய் தான்; நெருப்புக் காய்ச்சல் போலிருக்கிறது. இப்பொழுது ஒரு பயமுமில்லை; 9 நாள், இல்லையேல் 13 நாள், இல்லையேல் இருபத்தொருநாள் கழியவேணும்; அவதானமாகப் பாருங்கள்" என்று அங்கு நின்ற டக்டருள் ஒருவர் சொன்னார். இதனைக் கேட்ட இராமசாமிப்பிள்ளை கிறுதி கொண்டு சோர்ந்து அயலே இருந்த ஒரு சார்மனைநாற்காலியிற்சாய்ந்து விட்டார்; டக்டர்மாரும் வைத்தியர்களும் ஆறுதல் சொல்லி அவரைத் தேற்றினார்கள். பருவதம் புத்தி குறைந்தவளாதலால் தன் மகளுக்கு நேர்ந்த நோயைப் பற்றி அதிகம் கவலைப்பட்டாளல்லள். நோய்வருவதும் மாறுவதும் சகசந்தானே யென்பதுதான் அவளுடைய எண்ணம். இராமசாமிப் பிள்ளையும் தம்மளவிற் கவலைப் பட்டாரேயொழிய மகளுடைய நோயைப் பற்றி மனைவிக்குச் சொன்னாரல்லர். பங்கஜத்திற்குச் சுகமில்லையெனக் கேள்விப்பட்டபோது அவளை வந்து வந்து பார்த்த சுற்றமித்திரர் அயலார்க்கு ஒரு கணக்கில்லை யெனலாம். அவளுடைய தேக நிலைமையைக் கண்டு எவருங் கவலை கொண்டனர். "உந்தக் கருமிகளுக்கு இந்த இலட்சுமி கிடைக்குமா" என்ற அளவிலுஞ் சிலர் பேசிக்கொண்டு போனார்கள். (வரும்)

நமது நாவல்

# ஜீவப் பர சாகரன்

இயற்றியவர்

**மாசிலாமணி—சிவதாசன்**

திருக்கோணமலை

### அத்தியாயம் 1.

நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின் கண் மிக விசித்திரமான பாரி என்று ஓர் பட்டணம் உண்டு. அதில் மாயன் என்னும் அரசன் அறநெறியிற் கிஞ்சிற்றேனும் பிறழாது அரசுசெலுத்தி வந்தான். அம் மகாராஜனுக்கு ருக்குமணி என்று ஓர் பதிவிரதை யுண்டு. இவர்களிருவரும் மனமொருமித்து யாதொரு குறையுமின்றிச் சுகித்திருந்தார்கள். ஆயின், புத்திர சம்பத்து மாத்திரமில்லாத ஒரு குறைவு அவர்கள் மனத்தைச் சதா பிடித்துக்கொண்டிருந்தது. ஆனதால், அவர்கள் மக்கட்பேற்றை யடையப் பேராவல்கொண்டு, அறம் பலவும் புரிந்து தீர்த்த யாத்திரை சிவஸ்தல யாத்திரை யெல்லாஞ் செய்து, அளவிலா விரதானுஷ்டிதத்துச் சிவபெருமானை வேண்டி வந்தனர் அவர்களிருவரும், புத்திரப் பேறு இன்மையால், துன்பமடைவதைக் கண்ணுற்ற, சிவபெருமான பின்வருமாறு அவர்கட்குத் திருவாய் மலர்ந்தருளினார். "அறநெறிபிறழாக் குன்றுதலர்களாகிய மாயனே! ருக்குமணியே! உங்கள் தவத்திற்கு மெச்சினேன். உங்களுள்ளங்களிக்குமாறு அறம், பெருந்தன்மை, கல்வியறிவு, ஆகிய இவைகளை உடையவனும், இப் பூமண்டலத்தை ஒரு குடைக்கீழ் ஆளுந் திறமையுள்ளவனுமாகிய ஒரு நற்புதல்வனைப் பெறுவீர்கள். அப் புதல்வனுக்கு ஜீவமென்னும் பெயரே தகும். ஆதலால் அவ்வாறே பெயரிடுங்கள் என்று அநுக்கிரகித்து மறைந்தருளினார்.

சின்னாட்களின் பின், ருக்குமணி கருப்பவதியாகி ஓர் புதல்வனை ஈன்றாள். பிறந்த புதல்வனுக்கு ஜீவம் என்று பெயரிட்டனர். புதல்வனுக்கு வயது ஐந்தாகவும் பெற்றோர் தங் கடமையைச் செலுத்த எண்ணிக் கலாசாலைக் கனுப்பினர். பையனோ பரீட்சைகளொவ்வொன்றிலும் தேறினான். இதனைக் கண்ணுற்ற மற்றைய மாணவர்கள் இவன்மீது பொறாமை கொண்டு, இவனுக்கு ஏதாவதோர் தீங்கு விளைப்பதற்கு ஏற்பாடு செய்தனர். அவர்களுள் பரம் என்பவனும், சாகரன் என்பவனுமே, ஜீவனிடத்தில் மிகவும் பொறாமைகொண்டனர். ஏனெனில் ஜீவம் கலாசாலைக்கு புகுமுன் பரமும், சாகரனுமே பாடங்களனைத்திலும் முதன்மை பெற்றனர். இவர்களிருவரும் ஜீவத்தைக் கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

ஜீவமோ ஈகை, தயை, இரக்கம், எனும் சுகுணங்கள் வாய்க்கப் பெற்றவன். அவனிடத்தில் ஒருவன நட்புப்பாராட்டி, நண்பனுவானாயின் தன் நண்பனை விட்டு அவன் ஒரு போதும் பிரியான். அவனிடத்தில் உண்மை நட்பே பாராட்டுவான். ஜீவன் நிலைமை இங்ஙனமாக முன் கூறிய வாலிபர்களாகிய பரமும், சாகரனும், ஜீவனிடத்தில் உண்மை நட்புப் பாராட்டுபவர்கள் போல் நடித்து வந்தனர். பாவம்! தீங்கற்ற ஜீவம், அத் துஷ்டர்களின் இன்சொற்களால் மயக்கப்போகின்றான். அத் துரோகிகளோ நுனி நாவில் அமிர்தமும், அடி நாவில் நஞ்சுமுள்ளவர்களாயிருந்தனர். பாவியாகிய ஜீவத்தைக் கலாசாலை வேலையிலேயே துன்பத்துக்குட் படுத்த பல ஏற்பாடுகள் செய்தும் ஒன்றிலும் அவர்கள் எண்ணம் கைகூடவில்லை.

ஒருநாள் சாயங்காலம் மணி 4 ஆனதும், கலாசாலையினின்று மாணவர்கள் தத்தம் வீட்டையடைந்தனர். ஆனால் சாகரனோ வாடியமுகத்தோடும் நீடிய யோசனையோடும் தன்னில்லம் ஏகினன். இத் துஷ்டனுக்கு முகம்வாட்டமுற்றதும் நீடிய யோசனை ஏற்பட்டதும் இரு காரணங்கள் பற்றியாம். அவையாவை யோவெனில் தானும் பரம் என்னும் தனது உற்ற நண்பனும் எடுத்த கருமம் கைகூடவில்லையே என்பதும் குறித்த தினத்தன்று நண்பன் கலாசாலைக்கு வரவில்லையே என்பதுமேயாகும்.

சாகரன் வீட்டை அடைந்ததும் அவன் அன்னை அவனண்டை வந்து, "சாகரா! உன்முகம் வாட்டமுற்றிருப்பதன் காரண மென்ன?" என வினவினாள். சாகரன் ஒன்றும் பேசாது நின்றான். "கண்ணே! இன்றைக்குன்னை ஆசிரியர் தண்டித்தாரா?" என மறுபின்னும் வினவினாள். "தாயே! ஒன்றுமில்லை, இன்றைக்கு என் உற்ற நண்பன் கலாசாலைக்கு வரவில்லை, என்ன சம்பவித்ததோ தெரியவில்லையே என்பதைப் பற்றித் தான் மனஸ்தாபப்படுகின்றேன்." எனப் புகன்றான். சாகரா! இவ்வேளையே உன் நண்பன் இல்லஞ் சென்று அவரைப் பார்த்துவா" என அவனன்னை மொழிந்தனள். சாகரன் அவள் மொழியைச் சிரமேற் கொண்டு தன் நண்பன் வீட்டை நோக்கிச் சென்றான்.

.....................

சாகரன்: மாலை வந்தனம் நண்பா!

பரம்: மாலை வந்தனம்!

சா: இன்றைக்கேன் கலாசாலைக்கு வரவில்லை?

ப: ஒன்றுமில்லைச் சிநேகா! உடம்பு சற்று அசௌக்கியமாயிருந்ததினால் தான் வரவில்லை. உன் முகம் வாட்ட முற்றிருப்பதின் காரண மென்ன?

சா: நீர் கலாசாலைக்கு வராதிருந்ததினாலும், நாமிருவரும் எடுத்த காரியம் கைகூடவில்லை என்பதனாலுமே, என்முகம் வாட்டமுற்றிருக்கின்றது.

ப: சாகரா! பயப்படாதே; அக்காரியம் கை கூடும்.

சா: எப்படி நண்பா?

ப: எனக்கின்றைக்கோர் யுக்தி தோன்றிற்று. அது யாதெனில், ஜீவத்தைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, இரண்டு மூன்று கிழமைகளின் பின் அவனைக் கடலில் அமிழ்த்தி விடுவோம். மேலும் அவனுக்குச் சங்கீதம் கற்க விருப்பம் போல் தோற்றுகின்றது. நீயும் சங்கீதமறிந்தவனானையால், ஓர் வேளை கடற் கரையிற் போயிருந்து சங்கீதம் கற்பதற்கு விருப்பங் கொள்வான்.

சா: நண்பா! நீர் இப்போது கூறியது ஓர் நல்ல யுக்தி தான். நாளைக்கு ஜீவம் கலாசாலைக்கு வருவானாயின், அவனிடத்தில் நீரே இதைப் பற்றிப் பேசவேண்டும்.

ப: தடையில்லை, எல்லாவற்றையும் நானே பார்ப்பேன்.

சா: சிநேகித! ஒருவேளை அவனது பெற்றோர், காவலாளர் அவனைக் கொலை செய்தோ மென்பதை அறிந்தால் எமமைத் தொல்லைக்குட்படுத்துவார்களல்லவா?

ப: சாகரா! ஒன்றுக்கும்பயப்படாதே அவைகளெல்லாவற்றையும் வந்த பின் பார்ப்போம்.

சா: சரி நான் போய் வருகிறேன்.

ப: போய் வாரும்.

(தொடரும்.)

# யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

## 47 - ம் ஆண்டு நிறைவுவிழா

நிகழும் தாது ஆண்டு ஆனித்திங்கள் 7-ம் நாள் (20-6-36) சனிக்கிழமை பிற்பகல் 4½மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மேற்படி சபையின் 47 - ம் ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்படும்.

அவ்வமயம் அங்கத்தவர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்

க. ஆ. கந்தப்பசேகரகம்
கௌரவ காரியதரிசி

வண்ணார்பண்ணை.
5-6-36

### நிகழ்ச்சி முறை.

1. தேவாரம்
2. சென்ற ஆண்டுக் கூட்டவரலாறு
3. வருடாந்த அறிக்கையும் வரவுசெலவுக் கணக்கும்
4. புதிய ஆண்டின் உத்தியோகத்தர் தெரிவு
5. தேவாரம்.
6. சிற்றுண்டி

குறிப்பு:—

அங்கத்தவர்கள் தங்கள் சந்தாப் பணத்தைக் கொடுக்குமாறும் வேண்டிக்கொள்ளப் படுகின்றனர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ்ரீ
வைகாசி மீ உகஉ வியாழக்கிழமை

## வடமாகாணப் பரிபாலனம்—1935

### III

சென்ற 35-ம் ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டைக்காட்டிலும் வடமாகாணத்திற் குற்றங்கள்குறைவென மாகாணத் தலைவர் தமது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்; இது சிறிது ஆறுதலைத் தருவதாகும். கொலை தவிர இம்மாகாணத்திலுள்ள ஏனைய பிரதான குற்றச்செயல்கள் களவு, திருட்டுத் தொழில், பெண்களைக் கடத்துதல், ஆடு மாடுகளைச் சோரத்தனமாக அகற்றுதல், கத்திக்குற்ற முதலியனவாகும். சைவக் கோயில்களிலே மூர்த்திகட்குக்கீழ் வைக்கும் யந்திரத்தைத் திருடியதாக 19 வழக்குண்டு. இவைகளுள் 4 வழக்கிற் குற்றவாளிகள் கண்டுபிடித்து விசாரணை செய்து தண்டனை விதிக்கப் பெற்றனர். தாலிக் கொடிக் களவு தென்மராட்சியில் பிரதான பட்டினமாகவுள்ள சாவகச்சேரியிலே இப்பொழுது ஒரு பொலிஸ்தானம் புதிதாகத் தாபிக்கப்படலாயிற்று. இனிமேல் இந்தப் பகுதியிற் குற்றங்கள் குறையுமென்பதே மாகாணத் தலைவரின் நம்பிக்கை.

குறித்த ஆண்டில் மதுபரிபாலனப் பகுதி சம்பந்தமாகவுள்ள வழக்குகள் குறைந்து விட, மோட்டார் - ஸ் தொடர்பாகவுள்ள வழக்குகள் அதிகப்படலாயின வென்று மாகாணத் தலைவர் தெரிவித்திருக்கின்றார். மோட்டார் டஸ் சம்பந்தமான வழக்குகள் அதிகப்பட்டமைக்குக் காரணம் மோட்டரதச் சாரதிகள் டஸ் சாரதிகள் செய்யும் மிகச் சிறிய குற்றங்களையும் 'போலிசர் "துரும்பைத் தூணாக்கிய வாறு" பெரியதாக்கி நீதிஸ்தலத்தில் அச் சாரதிகட்கு விரோதமாக வியாச்சியந் தொடரத் தலைப்பட்டமையேயாகும். இச்சாரதிகட்கு மாறுகத் தொடரப்படும் வழக்குக்களுட் டல, வீண் வழக்குக்களென்றும், அவை காரணமாக நீதிஸ்தலத்தி லுள்ளாரின் அரிய நேரம் வியர்த்தமாகின்ற தென்றும் அப்படியான குற்றங்களிற் சாரதிகளைப் பொலிசரே எச்சரிக்கைபண்ணி விடலாமென்றும் நீதிபதிகள் பொலிசரைச் சினந்தமையையும் கடிந்தமையையும் புதினப் பத்திரிகைகளிற் பல முறை படித்துள்ளோம். பொலிசர் இனியேனும் அந் நீதிபதிகள் சொன்னவற்றை மதித்து நடந்து கொண்டு நாட்டிலே பெரிய குற்றங்களைச் செய்யுந் துஷ்டரை விசாரணைசெய்து பிடித்து நீதிஸ்தலங்களில் ஒப்புவித்துத் தண்டனைக்குள்ளாக்குவது நன்மையாகும் மேலும் தலைமைக்காரர்களைச் சனங்கள் மதிப்பதும் அவர்களுக்கு அடங்கி நடப்பதும் இக்காலத்திற் குறையத் தலைப்பட்டுக்கொண்டதால் சாவகச்சேரி வல்லுவெட்டித்துறையென்னும் ஊர்களிற் செய்த பிரகாரம் இன்னுங் குற்றங்கள அதிகப் படும் ஊர்களிலே பொலிஸ் தானங்களைத் தாபிப்பது நன்மையாகும். ஆனைக் கோட்டை மானிப்பாய் சங்கானை என்னும் ஊர்களுக்கு மத்தியில் ஒரு பொலிஸ்தானம் ஆவசியகம் வேண்டுமென்பது இங்குள்ளார் பலரது அபிப்பிராயமாகும்.

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கத்தைப் பற்றி மாகாணத் தலைவர் யாதும் குறிப்பெழுதவில்லை. ஒருபோது பட்டின பரிபாலன சங்கத்தவரே தங்கள் வருடாந்தப் பரிபாலன அறிக்கைப் பத்திரத்தை வெளிவிடுவரென் றெண்ணி மாகாணத் தலைவர் அப்படிச் செய்தனர் போலும். யாழ்ப்பாணத்திலே சுகாதாரசங்க பரிபாலனத்திலுள்ள பட்டினங்கள் பருத்தித்துறை வல்லுவெட்டித்துறை ஊர்காவற்றுறை என்னும் மூன்றுமாம். வடமாகாணத்திலுள்ள கிராமச் சங்கங்கள் 38 என்றும் அவைகளுட் பல சங்கங்கள் செய்து வரும் முயற்சிகளும் திருத்தங்களும் பாராட்டத் தக்கன வென்றும் மாகாணத் தலைவர் தெரிவிக்கின்றார். கிராமச் சங்கங்கள பொறுப்பிலே மேற்படி 35 ஆண்டில் திருத்தப் பட்டனவும் செப்பனிடப்பட்டனவுமான ஒழுங்கைகள் தெருக்களின் தொகை 542 ஆகும். தூர்ந்தும் பாழடைந்தும் தண்ணீரின்றியும் கிடந்த குளங்கள் துரவுகள் கேணிகள் 283 வரையில் தோண்டப்பட்டும் பழுது பார்க்கப்பட்டு முள்ளன 195 வாய்க்கால்கள் சிதைந்துபோய் வெள்ளம் பாய முடியாமற் கிடந்தவை தோண்டி ஆளமாக்கி அணைகட்டிச் செப்பனிடப் பெற்றன. 21 மதகுகள் சீர்ப்படுத்தப் பட்டன. 43 பாழ்ங்கிணறுகள் திருத்தி ஊரார் உபயோகிக்கும்படி செய்யப் பெற்றுள்ளன, 7 கூபங்கள் ஆவசியகம் வேண்டிய இடங்களிற் புதியனவாய்த் தோண்டிக் கட்டப் பெற்றுள்ளன இப்படியான வேலைகளின் பொருட்டுச்செலவான பணம் 8323 ரூபா வரையிலாகும்.

இவைகளை யெல்லாங் கண்டு போலும் பட்டினவாசிகளாக இருப்போருட் பலர் பட்டினத்தை விட்டுக் கிராமங்களிற் சென்று குடியிருக்க விரும்புகின்றனர்.

## இத்தாலியின் யுத்தத் திமிர்

இத்தாலியின் யுத்தவெறியினால், அதன் அநாகரிகமான பேராசையால், இப்பொழுது ஐரோப்பா முழுவதும் திகிலடைந்திருக்கிறது. எப்போது மற்றொரு யுத்தம் ஆரம்பிக்கும் என்று எவரும் எதிர்பார்க்கக்கூடியவாறு அங்கு நிலைமைகள் இருக்கின்றன. இரத்தத்தில் ருசிகண்ட குக்கல்கள் மீண்டும் மீண்டும் மனிதரைத் தீண்டிக் கடிக்க அவாவுதல் வழக்கமென்பர் உலகத்தோர். அஃதேபோல அபிசீனியாவோடு நடத்திய போரில், அநியாயமான முறைகளைக் கையாடி ஏதோ ஒருவிதமாக வெற்றியை அடைந்துவிட்ட இத்தாலி அதன் பலனைத் தான் அநுபவித்தற்கு ஆசையுற் றிருந்தவற்றை அநுபவிக்கமுடியாமல் விழிக்கின்றது.

சர்வதேசசங்கத்தீர்மானங்களின்படி உண்டானபொருளாதாரக் கட்டுப்பாடுகள் அதற்குத் தடையாக இருக்கின்றன. இவற்றால் தாம் வெற்றியடைத்த நாடாகிய அபிசீனியாவில் அரசாங்கநிர்வாகத்தை நடத்திக்கொள்ளுதற்கேனும், உள் நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வேண்டிய பொருள்களை வேற்றுநாடுகளி லிருந்து இறக்குமதி செய்வதற்கேனும் முடியாமல் முஸோலினி திகைக்கின்றார். வேறு நாடுகளிலிருந்து கடன் பெறலாமென்றாலோ அதற்கும் சர்வதேச சங்கம் பெரும் தடையாக இருக்கின்றது. ஆகவே, மேற்குறித்த கட்டுப்பாடுகளைச் சர்வதேச சங்கம் நீக்கி வைக்கவேண்டு மென்பது அவரது ஆசையாகும். இதற்காக அவர் படாத பாடெல்லாம் படுகின்றார். எவர்க்கும் மிஞ்சிப் பேசும் முஸோலினி பிரிட்டனைச் சிறிது கெஞ்சியும் பார்த்தார். அதனாலும் பயனேற்படவில்லை. புதியதொரு புத்தி அவருக்குத் தென்பட்டிருக்கிறது. அஃது என்னையோவெனில், சர்வதேச சங்கத்தோடு மாறுபட்ட கருத்துடைய ஜெர்மனியோடு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்ள அவர் ஆலோசிக்கின்றார். இத்தாலியின் எல்லைப் புறத்தில் இருக்கும் ஆஸ்திரேலியாவின் சுதந்திரத்திற்கு ஜெர்மனி பங்கம் விளையாத பக்ஷத்தில், ஜெர்மனி தனது புராதன குடியேற்ற நாடுகளை மீண்டும் பிடிப்பதற்குத் தாம் உதவியாக நிற்க முஸோலினி ஒருப்பட்டிருக்கிறாராம். ஆயின், இதற்குக் கைம்மாறாக, ஜெர்மனி சர்வதேச சங்கத்தை எதிர்க்க வேண்டுமாம். இது உண்மையில் கையாளப்படுமாயின் ஐரோப்பாவிலுள்ள பால்கன் நாடுகளின் சுதந்திரத்திற்கு ஆபத்து நேரிடும் என்பது நிச்சயம். அங்ஙனம் நேரின் பிரான்சும் பிரிட்டனும் வாளா இருக்க முடியாது. அவை சர்வதேசசங்கத்தின் மூலமாக இன்னும் அதிகமான கட்டுப்பாடுகளைச் செய்ய நேரிடும். இன்றேல், சர்வதேசசங்கம் முஸோலினிக்குத் தலைவணங்கியே தீரவேண்டும். இத்தாலியினாலோ அல்லது ஜெர்மனியினாலோ பல நாடுகளின் சுதந்திரம் பாதிக்கப்படுமாயின், அதனையும் பார்த்துக்கொண்டு சர்வதேச சங்கம் வாளா இருக்குமாயின், அதனிடத்துள்ள குற்றுயிரும் பூரணமாக அற்றுப்போகும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. மார்ஷல் படாக்ளியோ இத்தாலிக்கு அழைக்கப்பட்டதிலிருந்தும் இத்தாலியின் ஏனைய விவகாரங்களி லிருந்தும் அது மற்றுமொரு யுத்தத்திற்கு வித்திடுகின்றது என்றே ஊகிக்கக் கிடக்கின்றது.

ஆயின், யுத்தப் பித்தும், வெற்றித் திமிரும்கொண்ட இத்தலியை மேலும் அத்துறையில் அதிக தூரம் செல்லவிடாதபடி தடுப்பதற்கான ஆயத்தங்களை பிரிட்டனும் செய்துவருகிறதாகவே தெரிகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினர், மத்தியதரைக் கடலிலுள்ள கடற்படை நிலையங்களை மாற்றியமைக்க முயற்சி செய்துவருதலும் இதற்கு ஓர் அறிகுறிபோலும். எனவே, ஐரோப்பாவில் இப்போதைக்கு அமைதி ஏற்படும் என்று எதிர்பார்க்கவே இடமில்லை.

## போதனா பாடசாலைகளின் சித்திரவேலைப்பொருட் காட்சி

முடிவுப் பரீட்சைக்காக யாழ்ப்பாணத்திலுள்ள போதனா கல்லூரிகள் சமர்ப்பித்த சித்திரவேலைப் பொருள்களின் காட்சி ஒன்று இம்மாதம் 17-ந் திகதி புதன்கிழமையன்று கோப்பாய் ஆசிரியர் போதனாபாடசாலையில் நடைபெறும். எனவும், ஆசிரியர்கள் பிற்பகல் 2 மணிக்கும் பகல் 5 மணிக்குமிடையே வந்து பொருட்காட்சியைப் பார்வையிட்டுப் போகுமாறு தாம் வேண்டிக்கொள்வதாகவும் வடபகுதிப் பிரதம வித்தியாதரிசி திரு கே. எஸ் அருணந்தி தெரிவிக்கிறார்.

## விவாகம்.

நிகழும் தாது வருஷம் வைகாசிமீ 24-ந் திகதி (6-6-36) சனிக்கிழமை இரவு 11 மணி தொடக்கம் 2 மணி வரையிலுமுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் வண்மேற்கு திரு. ம. நாகராசா அவர்களுக்கும் நீராவியடி திரு. வே. பொன்னம்பலம் அவர்கள் புத்திரி சௌபாக்கியவதி சரஸ்வதி அம்மாளுக்கும் மணமகளில்லத்தில் விவாகம் இனிது நிறைவெய்தியது. தம்பதிகள் சகலபேறுகளுடைய பெற்று இனிது வாழ இறைவன் கருணைபாலிப்பாராக.

## பருந்தின் வீழ்ச்சி



நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஏக தடல்புடலாக இருந்தது. யாழ்ப்பாணத்திற் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள ஒரு நகரசபைக் கட்டிடம் இருக்கிறதே, அதற்குமுன்னைப் பெருந்திரளான ஜனங்கள் குழுமிநின்றனர். பொலிஸார் அவர்களையெல்லாம் தெருவின் ஒருபக்கத்தே வரிசையாக நிறுத்திக் காவல்செய்து நின்றனர். கட்டிடத்திற்கு முன்னுற் பல நாற்காலிகள் இடப்பட்டிருந்தன. அவற்றிற் பல ஆடவரும் மகளிரும் வீற்றிருந்தனர். பாண்ட் வாத்தியம் ஒருபுறம் ஒலித்தது. மேளவாத்தியம் மறுபுறம் ஒலித்தது. இடையிடையே அவர் வெடிகள் இடிமுழக்கம்போல அதிர்ந்தன. இவ்வாறு அதிர்ந்த வெடிகளுள் ஒன்று வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த நமது பருந்தையும் வந்து அணுகிற்று உடனே அதன் பார்வை மேற்படி கூட்டத்தின்மீது விழுந்தது. விழவே, "அகப்பட்டது உணவு" என்று அது சரேலென்று குதித்தது. பருந்தைக் கவனிப்பார் ஒருவருமிலராயினும், பருந்து அங்கு நடைபெறும் நடவடிக்கைகளையெல்லாம் நன்கு கவனிக்கக் கூடிய ஒரு மரக்கிளையில் மகா ஜாக்கிரதையோடு உட்கார்ந்துகொண்டது அப்போதுதான் மேன்மை தங்கிய இலங்கைக் கவர்னர் ஸ்டப்ஸ் அவர்கள் தாம் இவர்ந்துவந்த மோட்டார் இரதத்தைவிட்டு இறங்கியருளும் திவ்விய சமயம். எல்லோரும் கவர்னர் வந்துவிட்டார் என்று அவரையே பார்த்தபடி அங்காந்த வாய்களோடு நின்றனர். இதுதான் சமயம்என்று பருந்து உடனே அவர்களை ஒரு படம் பிடித்துவிட்டது. நகரமேயர் இருக்கிறாரே, அவர் வந்து கவர்னர் அவர்களை வரவேற்று மகாவணக்கத்தோடும் மரியாதையோடும் இட்டுச் சென்று சபை நடுவே வைக்கப்பட்டிருந்த மேசைக் கருகாமையில் உட்கார வைத்தார். மேயர் மனைவியாரும் வீற்றிருந்தார். வேறும் பலர் வீற்றிருந்தார்கள். பக்கத்திற் பத்திரிகை நிருபர்களும் இருந்தார்கள். பாவம் கவர்னர் பேசும் போது இவர்கள் பேனுக்களும் கைகளும் பட்டபாடு கடவுளுக்குத் தான் தெரியும் கவர்னர் வாய்திறக்க இவர்களுக்கு இவ்வளவு நடுக்கமெடுத்து விட்டதா என்று பருந்து தன்னுள் ஆச்சரியப்பட்டுக்கொண்டது ஏதோ கவர்னர் பேசினார். ஆனால், அது இங்கிலீஷ் பாஷையாக இருந்தமையால் அது பருந்துக்கு ஒன்றும் புரியவில்லை. எவருாலும் அவர் மிகவும் அன்பாகவும் ஒருவர்மனமும் புண்படாமலும் மிக உருசியாகப் பேசினார். அவர் பேசிய விதம் பருந்தைக் கூடக் கவர்ந்து விட்டது. இவர் உண்மையில் நல்ல மனுஷன் தான் என்று உடனே ஒரு சர்ட்டிபிக்கட் எழுதிக் கொடுத்துவிட்டது. பேசிமுடிந்ததும், கவர்னர் அக்கட்டிடத்தைத் திறந்து வைத்தார். உள்ளே புகுந்து பார்வையிட்டார். பிறகும் வெளியே வந்தார். இம்முறை அவருக்கு வேண்டிய அளவு சிற்றுண்டி பரிமாறப்பட்டது வந்தவர்களுக்குப வேட்டைதான். சிற்றுண்டியும் முடிந்ததையா? ஒரு பெரிய வேலை நடக்கேதரியது. நகரசபைத்தலைவர் கவர்னரை அழைத்துச் சென்று அங்கிருந்த ஆடவர் மகளிரிற் றமக்குக் கண்ணியமாகத் தோன்றினவர்களையெல்லாம் அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவரும் அவர்களோடு கைகுலுக்கி அவர்களைக் கௌரவப்படுத்தினர். இது உண்மையிற் பார்க்க வெகு வேடிக்கையாகவே இருந்தது. கவர்னரோடு கை குலுக்கி முடிந்தவர்களது முகங்களும் வாய்களும், கைகுலுக்க ஆயத்தப் படுத்தினவரது பரபரப்பும் சுறுசுறுப்பும் பார்க்க மிக அழகாகவே இருந்தன. கவர்னருக்குச் சிவக்கச் சிவக்க விடும்போலிருந்தது. பருந்தும் சரேலென்று இறங்கி அவரோடு கைகுலுக்க நினைந்தது. ஆயின் அவர்கை ஒருவேளை தன்னை எறிந்து விடக்கூடும் அல்லது தனது நகங்கள் அவரது கையை ஊறுபடுத்தி விடக்கூடுமென்று ஞாபகம் வந்ததும், அதை நிறுத்திக் கொண்டது. எல்லாம் முடிந்ததையா? கவர்னரும் போய் விட்டார். போகும்போது, பருந்தும் அவரைச்சிறிது தூரந்தொடர்ந்துசென்று "கவர்னர் அவர்களே! நீங்கள் இவ்விடத்தை மறந்து விடக்கூடாது. இப்படி இடையிடையே வந்து போக வேணும்" என்று வேண்டிக் கொண்டு அவருக்குத் தமிழ் முறையில் ஒரு நமஸ்காரம் போட்டுவழிவிட்டுத்திரும்பிவிட்டது.

* * *

மற்றொரு செய்தியைப் பருந்து கேள்வியுற்றது. கேள்வியுற்றதும் அதற்குச் சிறிது அச்சமும் அதிசயமும் ஏற்பட்டது. ஏன்? செய்தி அப்படிப்பட்ட செய்தி. இந்தியாவிலே இருந்து ஒரு புலி (Tiger) யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கிறது என யாரோ கதை கட்டிவிட்டார்கள். உடனே அந்த டைகரைப் பார்த்துத் தான் தீர வேண்டுமென்று பருந்து யாழ்ப்பாணம் முழுவதும் வட்டமிட்டுப் பார்வையிடலாயிற்று. புலி அகப்படவேயில்லை. ஈற்றில் சன்னாகத்தில் இராமநாதன் கல்லூரியிற் போய்க் கண்டது. கண்டதும் பருந்துக்கு அச்சமெல்லாம் நீங்கி விட்டது. ஏனெனில், அப்புலி உண்மையிற் புலியல்ல எனறும், புருஷ வியாக்கிரமாகிய சங்கீதப் புலி 'ஃ' அதுவெனவும் அறியலாயிற்று. பேர்போன சங்கீத வித்வான் டைகர் வரதாச்சாரியார் தான் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்திருக்கிறார் என்பதை அ[illegible] கித்துக் கொண்டதும் அ[illegible] அவரை அடைந்து அவரது யாழ்ப்பாண விஜயத்தைப் பற்றித் தனக்கு ஏற்பட்டுள்ள அக மகிழ்ச்சியை மிகத் தாழ்மையோடும் தெரிவித்து விட்டுத் திரும்பி விட்டது இச் சங்கீதப் புலியின் பாய்ச்சல்களை இந்த வாரம் அடுத்த வாரங்களில் யாழ்ப்பாணத்திற் சிற்சில மண்டபங்களிற் காணக் கூடுமென்றும் யாழ்ப்பாணத்திலுள்ள சங்கீதக் கழகங்களெல்லாம் ஒருவாறு தண்ணீரைத் தடைத்துக் கொண்டு [illegible]வாததிறகேனும்விழித்துக் கொள்ளும்என்றும் பருந்துதெரிவிக்கின்றது.

* * *

இவ்வளவோடு பருந்து இம்முறைக்குத் தனக்குக் கிடைத்த உணவு போதும் என்று திருப்திஸ்துக் கூறி, ஆறுதலாக வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. வேண்டுவோர் முன்போலவே அதற்கு எழுதி விபரம் அறிந்து கொள்ளலாம்.

## உலக்கையடியா?

மல்லாகம் கோட்டில் சென்ற 8-6-36 திங்கட்கிழமை மூளாயில் வசிக்கும் (1) என். சுப்பிரமணியம், (2) என் இராமசாமி, (3) எம். நாகலிங்கம் ஆகியவர்களில் 1ம் எதிரி முத்துக்குமாரு பெண் கன்னிப்பிள்ளையை ஓர் உலக்கையால் தாக்கிப் படுகாயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டிய வழக்கில் 2ம் 3ம் எதிரிகளை விடுதலை செய்தும் 1ம் எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு 100 ரூபா அபராதமும் ஒரு நாள் மறியலும் தீர்க்கப்பட்டது. அபராதம் கட்டத்தவறினால் 6 கிழமை மறியல் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. -(நமது நிருபர்)

## சிறுவன்—குரங்குகள் சண்டை

அயம்பேட்டை 4—

பசுபதிகோவில் என்ற கிராமத்திலுள்ள தேங்காய்களை யெல்லாம் குரங்குகள் வந்து சில நாட்களாக அழித்துக்கொண்டு வருகின்றன இதைக்கவனித்த சிவசாமி என்ற 12 வயதுச் சிறுவன் ஒருநாள் 4 குரங்குகள் ஒரு தென்னைமரத்தை அழித்துக்கொண்டிருக்கும் பொழுது அந்த மரத்தில் ஏறி அவைகளை விரட்டினான். குரங்குகள் சிறுவனை எதிர்த்துக் காயப்படுத்தின. சிறுவன் கீழேவிழுந்து உயிர் துறந்தான்.

# தேசாதிபதி அவர்களின் சொற்பெருக்கு

## யாழ்ப்பாணம் நகரசபைத் திறப்புவிழா

## குதூகலமான வரவேற்பு

"சிக்கனமாக வாழ்க்கை நடத்துவோர் மீது யாழ்ப்பாண மக்களுக்கு விருப்பம் அதிகம்"

[ நமது விசேஷ நிருபர் ]

நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில், இலங்கைத் தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாணம் முற்றவெளியில் புதிதாக அமைக்கப்பெற்ற நகரசபை மண்டபத்தைத் திறந்துவைப்பதற்காக, அங்கு வந்திருந்தார்கள். பெருந்தொகையான ஆடவரும் மகளிரும் திறப்பு விழாவிற்கு விஜயஞ்செய்திருந்தனர். நகரசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். நல்லையா அவர்கள், தேசாதிபதி அவர்களை வரவேற்றனர். வழக்கறிஞர் திரு. பதஞ்சலி அவர்கள் அவருக்கு மாலை சூட்டினர்.

பின் திரு. நல்லையா அவர்கள் தேசாதிபதி அவர்களை வரவேற்று முடித்தால், தேசாதிபதி அவர்கள் தமது வேண்டுகோளுக் கிணங்கியமைக்காகத் தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் யாழ்ப்பாணத்தவர்கள் அதுபற்றி உண்மையிலேயே உவகையுற்றிருப்பதாகவும், தேசாதிபதி அவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களிற் கவனஞ் செலுத்திவருதல் பெரிதும் ஊக்கந்தருவதொன்றாகும் என்னவும், யாழ்ப்பாணத்தில் ஒரு தேசாதிபதி இத்தகைய வைபவத்[தைப் பங்]கு பஞ்செய்தமை இதுவே முதன்[மு]றையாக நடந்த சம்பவமாகு[மென்]று கூறி, யாழ்ப்பாண நகரசபையின் வரலாற்றையும் அக்கட்டிடம் ஏற்படுத்தப்பட்ட வகையையுமபிறவற்றையும் பற்றித் தெரிவித்தார். அதன்பின் யாழ்ப்பாண நகரசபைக்கு அரசாங்கசபையின் உதவிவேண்டுமென்றும், தேசாதிபதி அவர்களது உதவியாலும் ஸ்தல ஸ்தாபன மந்திரியாரது உதவியாலும் தாம் இச்சபைக்கு உதவிப் பணம் பெறக்கூடும் என எதிர்பார்ப்பதாகவும் கூறினர்.

அன்றியும், டவுன்ஹால் இன்னும் கட்டி முடிக்கப்பட வில்லையென்றும், அதுவும் கட்டிமுடிக்கப்படின், அரசாங்கசபையினர் கூடத் தமது கூட்டங்களிற் சிலவற்றை இங்கு நடத்தலாமென்று தாம் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இதன்பின், தேசாதிபதி அவர்கள் எழுந்து பேசியது வருமாறு:-

இக்கட்டிடத்தைத் திறந்து வைக்குமாறு நீங்கள் என்னை வேண்டிக்கொண்டபோது நான் அதை மிக்க மகிழ்ச்சியோடுஏற்றுக்கொண்டேன். இத்தகைய கட்டிடம் கட்டப்பெற்றிருக்கிறதென்பதைப் பார்க்க நான் ஆவாவுற்றிருந்தேன். இக்கட்டிடம் கட்டப்பெற்றிருக்கும் முறையும் அதனைக் கட்டியோரது சிற்பவன்மையும பாராட்டத்தக்கவை. பப்ளிக் வ. டி. சித் தலைவரையும் யாம் பாராட்டுகின்றோம். இன்னும் இங்கு நான் வருவதற்கு எனக்கு மகிழ்ச்சியைத்தந்தபக்கு மறொரு காரியம், நான இலங்கையிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் முன்னேற்றத்தில் அதிக ஊக்கமெடுத்து வந்தமையுமாகும். அரசாங்க சபையினும் பார்க்க ஸ்தலஸ்தாபனங்கள் முக்கியமானவை என்பது எனது கருத்து. ஏனெனில்,ஸ்தலஸ்தாபனங்கள் சனங்களோடு மிக நெருக்கமாக நடமாடுகின்றன. ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள அங்கத்தவர் மீது ஜனங்களுக்கு அதிக அதிகாரமும உண்டு. அவ் அங்கத்தவர்கள் ஜனங்களுக்கு நன்கு தெரிந்தவர்களாயுமிருக்கின்றனர். அரசாங்கசபைக் கூட்டங்களிற் சிலவற்றையும் யாழ்ப்பாணத்தில் நடத்தலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. ஆயின், நான் அவ் ஆலோசனையை ஆதரிக்கவில்லை. அரசாங்கசபை என்றால், அரசாங்க சபையிலுள்ள அங்கத்தவர்கள் மாத்திரம் ஒருங்கு கூடுவதல்ல. அச்சபையோடு சம்பந்தமுள்ள செக்ரிட்டேரியட் முதலியவையும் இங்கு கொண்டு வரப்பட வேண்டி நேரிடும். அரசாங்க அச்சுக் கந்தோரும் இங்கு கொண்டுவரப்பட வேண்டி நேரிடும். ஆகவே, அந்த ஆலோசனை அநுஷ்டானத்திற் கையாளத்தக்க தொன்றல்லவென்பது எனது அபிப்பிராயமாகும்.

யாழ்ப்பாணத்தில் நன்கு நிறுவப்பெற்ற ஓர் அரசியல் வாழ்க்கைக்கு இது ஓர் ஸ்தானமாக வேண்டுமெனபதே எனது விருப்பம். யாழ்ப்பாண மக்கள் சிறிது சிறிதாக இந்த யூ. டீ. சி. யை, முனிசிப்பாலிறறி ஆக்குவதற்குக் கிளர்ச்சி செய்வாராக. முனிசிப்பாலிற்றி பெருஞ் செலவோடு கூடியதாகும் என்பதே அதற்குச் சிலரால் காட்டப்படும் எதிர்ப்பாகும். ஆயின்,ஜனங்கள் செலவுச் சுருக்கத்தோடு கருமம் ஆற்றும் அங்கத்தவர்களை, அவ்வாறு செலவுச் சுருக்கத்தோடு கருமம் ஆற்றுவார்கள் என்றவாக்குறுதியின் பேரில் தெரிவுசெய்வார்களாயின், அந்த எதிர்ப்புக்கும் இடமில்லாமலே போய்விடும். சிக்கனமாக வாழ்க்கை நடத்துவோர்மீது யாழ்ப்பாண மக்களுக்கு விருப்பம் அதிகம்

தண்ணீர் வசதியேமுதற்கவனிக்க வேண்டிய வி[ஷய]மாகும். உங்களுக்கு முனி[சிப்பா]லிற்றி இருக்குமேல் இதற்காகக் [கிள]ர்ச்சி செய்வதற்கு வசதி உண்[டா]கும். இக்கட்டிடம மிகவும் [பிர]யோசனப்படக்கூடிய தொன்றென்றே நான்கருதுகின்றேன். இதனை மிக்க மகிழ்ச்சியோடு நான் திறந்து வைக்கின்றேன்"

இதன்பின், தேசாதிபதி அவர்கள் மண்டபத்தைத் திறந்துவைத்து உள்ளே சென்று அதனைப் பார்வையிட்டார்கள். பின் அவர் வெளியே வந்ததும் சிற்றுண்டி பரிமாறப்பட்டது. சிற்றுண்டி முடிந்ததும், நகரசபைத்தலைவர் திரு. ஆர். ஆர். நல்லையா அவர்கள் அங்கு வந்திருந்த பல பிரமுகர்களைத் தேசாதிபதியவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பின் மாலை 5-30 மணியளவில் தேசாதிபதியவர்கள கொழும்பிற்குத் திருப்புதற்காகக் கூட்டத்தை விட்டு புகையிரத ஸ்தானத்திற்குப் போனார்

## 350 வயதான யோகி

பெர்ஹாம்பூர் 6வ

பிரம்மச்சாரி நரசிம்ம மூர்த்தி என்பவர் ஹிமயமலையில் ஓர் குருவைத் தேடிச்சென்று யோக உபதேசம் பெற்ற விருத்தாந்தத்தை ஆந்திர பாஷாபிவிருத்தி சமாஜ ஹாலில் இரண்டு பிரசங்கங்களில் கூறினர். அவருடைய முதல் பிரயாணம் பயனளிக்கவில்லை. இரண்டாம் முறையே அவர் குருவைக் கண்டுபிடித்தார். அவர் மலையில் பலவித அபாயங்கட்குட்பட்டு உயிர் தப்பியிருக்கிருர். ஒரு தடவை அவர் பத்ரிநாத்திலிருந்து 60மைல் தூரத்தில் மலைமேலிருந்து உருண்டுவிட்டார். கன்விரவில் அவா பனியின் கொடுமையால் கஷ்டப்படுகையில் ஓர் வெளிச்சத்தைக் கண்டு அதனருகில் சென்றார் அங்கு அவர் யோகத்திலாழ்ந்திருந்த ஒரு யோகியைச் சந்தித்தார். அந்த யோகி சிவாஜியின் கீழ் 100 படைகளுக்குத் தலைவராக விருந்தவராதலால் அவருக்கு 350 வயதாவது ஆகியிருக்கவேண்டும். மறுஜன்மமில்லையென்று தெரிந்ததும் அந்தயோகி சரீரத்தை விடுவாராம்.

# இலங்கையின் முதல் விமானம்

## ஜூலை மாதத்தில் பறக்கும்

கொழும்பு. ஜூன் 10

இலங்கையில் செய்யப்பட்ட முதல் விமானம், ஜூலைமாதம் இரண்டாவது வாரத்தில் பறக்குமெனத் தெரிகிறது. விமானம் அதன் சொந்தக்காரரால் பதிவு செய்யப்பட்டுவிட்டதானலும், அது பறப்பதற்குமுன் அரசாங்கத்தார் அனுமதிபெறவேண்டுவது அவசியமாகும். இப்பொழுது அவ்விமானம் பறப்பதற்குத் தயாராகவிருக்கிறது. எல்லா வேலைகளும் முற்றுப்பெற்றுவிட்டன

## அரசாங்கசபைக் கூட்டம்

கொழும்பு. ஜூன் 10

நேற்றுப் பிற்பகல் 4-30 மணிக்கு திரு. துரைசுவாமியவர்களின் தலைமையின் கீழ் மீண்டும் அரசாங்க சபைக் கூட்டம் ஆரம்பமாயிற்று. காலரியில்வழக்கத்திற்கு மாறாக அதிகமான விஸிட்டர்கள் குழுமியிருந்தனர் நேற்று விவாதம் ஸ்வாரஸ்யமாக இருந்தது.

## மஞ்சூரியாவில்

இப்பொழுது மஞ்சுக்கோ என்று சொல்லப்படும் பழைய மஞ்சூரியாவிலே ஜப்பானியர் தம் சைநியத்தை அதிகமாகக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது அங்கே நிற்கும் ஜப்பானிய சைநியத்தின் தொகை 2 லட்சத்திற்கும் $2\frac{1}{2}$ லட்சத்திற்கும் இடையில் மதிப்பிடத்தக்கதாம். கிழக்குச் சைபீரியாவில் உள்ள சோவியத்திற்குப் பயந்தே இங்ஙனம் பலப்படுத்துகின்றார்களாம்.

## அதிரூப அமராவதி

யாழ்ப்பாணம் ரீகல்தியேட்டரில் "அதிரூப அமராவதி" என்னும் ஓர் அழகிய படக்காட்சி காட்டப்பெற்று வருகின்றது. ஸ்ரீமதி T. S. வேலாம்பாளும் T. N. சிவக்கொழுந்தும் இதில் நடித்துள்ளார்கள். படம் சென்ற சனிவாரம் தொடக்கம் நடைபெறுகின்றது. வருகிற சனிக்கிழமைக்குப் புதிய படம் ஆரம்பமாகும்.

## தேகவியோகம்.

ஸ்ரீமதி செல்வரத்தினம் ஆறுமுகம்

நிகழும் தாது ஆண்டு வைகாசித் திங்கள் 12-ம் நாள் (25-5-36) திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் ஸ்ரீமதி செல்வரத்தின அம்மையார் பிரசவநோய் காரணமாக தமது கணவன்; தாய்; தந்தை; சகோதரர்களும்; சுற்றமித்திரர்களும் துயருறத் தமது இருபத்திரண்டாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவர் நாவற்குளி உடையார் ஸ்ரீமான் ச. கார்த்திகேசு அவர்களின் புத்திரியும் ஸ்ரீமான் S K ஆறுமுகம் அவர்களின் அருமைப்பத்தினியும் நாவற்குளி கிராமச்சங்கத் தலைவர் ஸ்ரீமான் S. சந்திரசேகரம் அவர்களின் மருகியும் கொஸ்கம புகையிரத ஸ்தான "கிளார்க்" ஸ்ரீமான் S சுப்பிரமணியம் அவர்களின் மைத்துனியும் G. P. O. ஓடிற்றர் ஸ்ரீமான் S. சிவசுப்பிரமணியம் அவர்களின் மருகியுமாவர்.

இவவின் பிரிவால் துயருறும் கணவன் தந்தை முதலானோர்க்கு எம் மனம் நெகிழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஸ்ரீமதி செல்வரத்தினம் ஆறுமுகம் அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

கடிதழ்

# சயிக்கிள் திருட்டுகள்

## இருவாரத்திற்குள் 6, 7 திருட்டுகளா?

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம் நகரசங்க எல்லைக்குள் அநேக இடங்களிற் சைபிக்கிள்களை மற்றவர்கள் களவாடா வண்ணம் கவனமாக வைத்து எடுக்கும்படி எச்சரிப்புப் பலகைகள் தூக்கப்பட்டிருக்கின்றன இவ்வாறு பொலிசார் அதிகம் கவனம் செலுத்தியும் களவோ ஒய்ந்தபாடில்லை. யாழ்ப்பாணத்தில் அநேகர் இத் தொழிலில் ஈடுபடுகிறார்களெனச் சொல்வது மிகையாகாது.

சென்ற 10-6-36 புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் கலையூரில் வசிக்கும் சின்னவன்-சின்னத்தம்பி என்பவன் சில நாட்களுக்கு முன் சுண்டிக் குளியில் வசிக்கும் ஒஸ்டின்-சாள்ஸ் என்பவருடைய "ஹேர்க்குயீல்ஸ்" பைசிகிள் ஒன்றை அவர் இல்லாத நேரத்தில் களவாடி விற்கப் போன போது பிடித்து அவன் மீது வழக்குத் தொடரப்பட்டு அவன் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டான. அப்போது கோர்ட் சார்சன் நாயர் இந்த இரண்டு வாரங்களுக்குள் 5 அல்லது 7 சயிக்கிள் திருட்டுகள் நடந்திருக்கின்றனதென்றும் இதில் 2 அல்லது 3 யாழ்ப்பாணக் கோடுகள் அமைக்கப்பட்டிருக்கும் எல்லைக்குளிருந்து களவாடப்பட்டதாகப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் எஞ்சியவை நீதிமன்றப்பிலேயே களவாடப்பட்டதென்றும் இவைகளைப் பற்றியெல்லாம் பொலிசார் விசாரணை செய்து வருகிறார்களென்றும் ஒரு கள்ளனையேனும் பிடிக்க முடியவில்லையென்றும் அகப்பட்ட இவ்வெதிரிக்கு அதிக தண்டனை விதிக்க வேண்டுமென்றும் நீதிபதியைக் கேட்டுக் கொண்டதன் பேரில் நீதிபதி எதிரிக்கு ஒருமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

அதிகமாக யாழ்ப்பாணத்துக்குப் பிறநாடுகளிலிருந்து வந்தவர்களே இத் தொழிலில் ஈடுபடுகிறார்களென அறிகிறோம். இவர்கள் இப்படிச் செய்து கொண்டு தப்புவதற்கு அதிகம் வழியுண்டு. சயிக்கிள்கள் ஒன்றும் அகப்படாமையால் அவையெல்லாம் யாழ்ப்பாணத்தைத் தவிர்த்த வெளியிடங்கட்கே கொண்டு செல்லப்படவேண்டியவையாகக் காணப்படுகின்றன. சில சிங்கள வாலிபர் இவ்விடம் வேலைக்கென்று வந்து விட்டு வசதி கண்ட காலத்தில் இப்படி. ஓர் சயிக்கிளையும் எடுத்துக் கொண்டு அதிலேயே அல்லது பஸ்ஸிலோ கொண்டு சென்று விடுகிறார்களென்வுஞ் சிலர் தெரிவிக்கிறார்கள். இப்படிச் செய்வதைப் பொலிசார் கவனம் செலுத்தினால் சயிக்கிள்கள் வெளியே கொண்டு போகப்பட மாட்டா என்று கருதப்படுகிறது.

## கவலையீனமான கார்ச் சாரத்தியம்

மல்லாகம் பொலிஸ் கோட்டில் சென்ற 8-6-36 திங்கட்கிழமை மயிலிட்டி தெற்கில் வசிக்கும் தம்பையா சின்னப்ப என்பவர் சென்ற கார்த்திகை மீ 13ந் திகதி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை றோட்டு வழியாக இ. 6109 இலக்கமிடப்பட்ட காரை மிகவும் கவலையீனமாகச் செலுத்தினமையால் உரும்பராயில் வசிக்கும் எஸ் செல்லையா என்பவரையும் கார்த்திகேசு என்பவரையும்தட்டிவீழ்த்திக் காயப்படுத்தியதாய்க் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரிக்கப்பட்டு எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 50 ரூபா அபராதமும் இப்பணம் கட்டத் தவறினல் 3 மாத மறியலுமெனத் தீர்ப்புக் கூறப்பட்டது

## கத்திக்குத்து வழக்கு

மல்லாகம் கோட்டில் இணுவிலில் வசிக்கும் கார்த்திகேசு பொன்னையா அவ்வூர் வி. சண்முகம் என்பவரைக் கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டு எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பணம் கட்டத்தவறினல் 2 கிழமை மறியல் இருக்கவேண்டும் என்றும் தீர்க்கப்பட்டது.

## அபின் வைத்திருந்தவர்க்கு 6 மாதம்

ஆணையிறவு மதுப்பரிசோதகரில் ஒருவராகிய ஆர். அப்பச்சி என்பவர் 8-6-36 இரவு யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்குச் செல்லும் றயிலில் வல்லுவெட்டியில் வசிக்கும் ஏகாம்பரம் மாணிக்கம் என்பவர் இரண்டு இருத்தல் அபினை ஓர் சீலையால் சுற்றிக் கட்டி அதைத் தனது இடுப்பு வேட்டிக்குள் கட்டிக்கொண்டுபோன போது மதுப்பரிசோதகர் பரிசோதித்துக் கண்டுபிடித்து 9-6-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி முகதாவில் கொண்டு வந்து குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தனர். எதிரி 3ம் வகுப்புப் பிரயாணிகள் பிரயாணம் பண்ணும் வண்டியில்தான் காணப்பட்டார். இவர மட்டக்களப்புக்குச் செல்வதாகச் சொன்னர். இவர் முன்னும் கஞ்சா வைத்திருந்ததற்கு 3 மாச மறியல் விதிக்கப்பட்டவர். எதிரி நீதிபதிக்குத் தான் குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் நீதிபதி எதிரிக்கு 6 மாத மறியல் தீர்த்தார்.

# இத்தாலி—ஜெர்மன் ஒப்பந்தம்?

## ஜெர்மன் குடியேற்ற நாட்டுக் கோரிக்கைக்கு இத்தாலி உதவி செய்யுமா

பாரிஸ் ஜூன் 7—

லி மாட்டின் பத்திரிகையின் ரோமாபுரி நிருபர் இத்தாலியும் ஜெர்மனியும் ஆக்ரமிப்புச் செய்வதில்லையென்று ஓர் உடன்படிக்கை செய்திருப்பதாக அறிவிக்கிறார். ஜூன் மாதத்திற்குப் பின்னும் கீர்ப்பந்தம நடைமுறையி லிருந்ததால் அந்த உடன்படிக்கை வர்ஜிதத்திற்கு வரும்.

அதன்படி ஜெர்மனி குடியேற்ற நாடு கோருவதற்கு இத்தாலி ராஜதந்திர நடவடிக்கைப்படி உதவி செய்யும். பால்கன் பிரதேசத்தில் ஜெர்மன் நாஜிகளின் ஆதிக்கமேற்படுவதை இத்தாலி ஆட்சேபிக்காது. அதற்குப் பதில் ஜெர்மனி ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை மதித்து நடக்கும். சர்வதேச சங்கத்தில் திரும்பவும் சேர முயற்சிக்காது.

இந்தச்செய்தி மிகவும் நம்பிக்கையான உயர்தர உத்தியோகஸ்தர்களிடமிருந்து கிடைத்ததாகவும் ஆனல் அரசாங்க தோரணையில் அது வர்ஜிதமடையவில்லை என்றும் அந்த நிருபர் சொல்லுகின்றார்.

# இலங்கையன்னையின் எழிற் புதல்வன்.

## ஸர். முத்துக்குமாரசாமியின் படத்திறப்பு விழா

## கவர்னர் சொற்பொழிவு

கொழும்பு 8உ

நேற்று முன்தினம் ராயல் கல்லூரிப் பரிசளிப்பு விழா நடந்தது. மே. த. கவர்னர் அக்கிராசனம் வகித்தார்.

மே. த. கவர்னர் வந்ததும் திரு. எல். டபிள்யூ. ஸாப்ஸன் அவரை வரவேற்றார். கல்லூரி மாணவர்களின் பயிற்சிப்பட்டாளம் காப்டன் எல். வி. குணரத்னவின்கீழ் மரியாதை அணிவகுப்பில் நிறுத்தப்பட்டிருந்ததைப் பார்வையிட்ட பிறகு மே. த. கவர்னர் கல்லூரி மண்டபத்திற்குள் சென்றார். மண்டபத்தில் ஓர் பணிமீது காலஞ்சென்ற ஸர் முத்துக்குமாரசாமியின் படம் திரையால் மூடப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

ஸர் முத்துக்குமாரசாமியின் உருவப்படத் திறப்பு

திரு. எப். எச். டி. சேரம் அவ்வுருவப்படத்தைத் திறந்து வைக்கும்படி மே. த. கவர்னரைக் கேட்டுக்கொள்ளுகையில் அந்தப்படம் அக்கல்லூரியில் பழைய மாணவராயிருந்து உபகாரச்சம்பளம் பெற்றுப் பிற்காலத்தில் இங்கிலாந்திலும் இலங்கையிலும் கீர்த்தியடைந்தவருடையதென்பதைக் குறிப்பிட்டார்.

மே. த கவர்னர் ஸர் முத்துக்குமாரசாமியின் பெயரை இங்கிலாந்தில் யாரும் அறிவார்களென்றும் இங்கிலாந்தில் முதன் முதலாக உபவாதத்தொழில் புரிய அனுமதிக்கப்பட்ட கிறிஸ்தவரல்லாதவர் ஸர். முத்துக்குமாரசாமி தானென்றும் இந்தக் கௌரவத்தைப் பெற்ற முதலாவது இலங்கையரும் அவர்தானென்றும் கூறினார். இளைஞர்கள் ஸர். முத்துக்குமாரசாமியைப் பின்பற்றி நடப்பார்களென்று தாம் நம்புவதாகவும் கூறிவிட்டு மே. த. கவர்னர் ஸர் முத்துக்குமாரசாமியின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

இவ் வுருவப்படத்தைத் திரு. ஏ. மகாதேவா (ஸர் பி அருணாசலம் அவர்களின் மகன்) நன்கொடையாக அளித்துள்ளார். திரு மகாதேவாவின் மகன் ராயல் கல்லூரியில் படித்துவருகிறான். ஓர் குடும்பத்தின் நான்கு தலைமுறையினர். ராயல் கல்லூரியில் கல்வி பயில்வது குறிப்பிடத்தக்கது.

பழைய சட்டசபை முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட பொழுது அதில் தமிழர்களின் பிரதிநிதியாகவிருந்த கனம் ஏ. குமாரசாமியின் மகன் முத்துக்குமாரசாமிக்கும் தற்சமயம் ராயல் கல்லூரி என்ற பெயரால் அழைக்கப்படும் கொழும்பு அகாடமியில் முத்துக்குமாரசாமி படித்து டர்னர் பிரைஸ் பெற்றார். பின் அவர் சுப்ரீம் கோர்ட் நியாயதுரந்தரரானார். அவரது தந்தையின் மரணத்திற்குப் பின் அவர் சட்டசபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்.

1875 ல் ஸர் பட்டம்

கீழ்நாட்டுக் கலைகளை மேனாட்டுக் கலைகளுடன் இணைக்கக்கூடியவராக இருந்தார். பௌத்த மதத் தத்வஞானம்பற்றி அவர் பல புத்தகங்கள் எழுதியுள்ளார். "சத்திய சீலன் அரிச்சந்திரன்,, என்ற புத்தகத்தை அவர் எழுதி விக்டோரியா மகாராணியாருக்கு அர்ப்பணம் செய்தார். அவரது நண்பரான லார்டு ஹவ்டனின் ஜீவிய சரித்திரத்தில் அவரது பெயரும் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

1875ம் வருஷம் அவருக்கு 'ஸர்' பட்டம் அளிக்கப்பட்டது. டிஸ்ரெயிலின் கடைசி நாவலில் அவர் வெகுவாகப் பாராட்டப்பட்டிருக்கிறார். அவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஸ்தானம் வகிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இங்கிலாந்துக்குப் புறப்படத் தயாராகையில் 45 வயதில் இறந்துபோனார். அவரது சகோதரரின் மக்கள்தாம் திரு பி குமாரசாமி, ஸர். பி. இராமநாதன் ஸர். பி. அருணாசலம் என்ற மூன்று சகோதரர்கள்.

1851ம் வருஷத்தில் மிக்க புத்திசாலியான மாணவன் முத்துக்குமாரசாமிதான் என்று ராயல் கல்லூரி குறிப்பிட்டிருக்கிறது.

## பாலர் பகுதி.

2ம் பக்கத் தொடர்ச்சி

மிருக்கலாம். பொதுவாக ஊரில்பயமிருக்கட்டும் என்று நினைத்து எல்லாரையும் தண்டித்தேன்'' என்றுசொன்னான்.

ராணி உடனே மந்திரியைக் கூப்பிட்டு, "இது யாருடைய கிளி, கண்டுபிடியும்'' என்றாள்.

அது குப்பனுடைய கிளி என்று தெரிந்தது.

ராஜா குப்பனை அழைத்து மறுபடி விசாரிக்க, அவன் ஒரு குற்றமும் செய்யாதவன் என்று அறிந்து அவனைவிட்டு விட்டான். எல்லோரும் கிளியின் அறிவைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது கிளி அறைக்குள் வந்து, "விடுதலை எப்போது, விடுதலை எப்போது? கூட்டிலிருக்கும் கிளிக்கு விடுதலை எப்போது? (குப்பனருகே சென்று), சிறையிலிருக்கும் கைதிக்கு விடுதலை எப்போது; (அரசனிடம் சென்று). உடம்பிலிருக்கும் ஆத்மாவுக்கு விடுதலை எப்போது?'' என்று தன்னைப்பற்றியும், குப்பனைப் பற்றியும், அரசனைப்பற்றியும் பேசுவது போல் சுற்றிச்சுற்றி வந்தது முதலில் இதன் கருத்து ஒருவருக்கும் தெரியவில்லை. ஏதோ புது விளையாட்டு என்று நினைத்தார்கள்.

பிறகு ராஜாராஜ்ஜியத்தை தன் குமாரனுக்குக் கொடுத்து விட்டுத் தவம் செய்யக் காட்டுக்குப் போனார். அங்கே ஒரு முனிவரைக்கண்டு அவருடைய சிஷ்யரானார். அந்த முனிவர் அடிக்கடி, "விடுதலை எப்போது விடுதலைஎப்போது, கூட்டிலிருக்கும் கிளிக்கு விடுதலைஎப்போது,சிறையிருலிருக்கும் கைதிக்கு விடுதலை எப்போது, உடம்பிலுள்ள ஆத்மாவுக்கு விடுதலை எப்போது, விடுதலை எப்போது?'' என்று கதறுவதைக் கேட்கும்போது ராஜாவுக்கு அடக்கமுடியாத ஆச்சரியம் உண்டாயிற்று.

அன்புள்ள சுப்புமாமா, சென்றவியாழக்கிழமை வெளிவந்த விஞக்களுக்கு விடை பின்வருமாறு:

1ம் விஞவுக்கு விடை: அம்மிக்குழவி.
2ம் விஞவுக்கு விடை: கள்ளி(ச்செடி)

இப்படிக்கு
தங்கள்அன்புள்ள மருமகன்
இல. 125. க. கயிலைநாதன்.

## "சிவன்" எனும் நாமம்

பேராசிரியர்: பவவிபூதி வித்தியா பூஷணர் (M. A.) கள்ளிக்கோட்டைச் சைவமகா ஜனசபைக் கூட்டத்திற்செய்த பிரசங்கத்தின் சாரம்:—

[மொழி பெயர்த்தது]

இருக்கு வேதத்திலே ருத்திரன் என்னுங் கருத்திற் சிவன் என்னும் நாமம் பல சுலோகங்களிற் காணப்படுகின்றது. மூன்று சுலோகங்கள் சிவனுக்கே தோத்திரமாகக் காணப்படுகின்றன. வேறும் 75 இடங்களிற் சிவன் என்னுந் திருநாமம் சொல்லப்பட்டிருக்கிறது. சிவனுக்குரிய திருநாமங்களில்ஒன்றாகிய "திரியம்பகன்'' என்பது இருக்குவேதத்திற் பல சந்தர்ப்பங்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்றது சிவலிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்யும்போதெல்லாம் இத்திருநாமம் ஓதப்படுகின்றது. வாஜசநேய சங்கிதையிலும் இத்திருநாமம் குறிக்கப்பட்டுள்ளது. அம்பிகையென்னும் நாமம் யஜுர் வேதத்திற் காணப்படுகிறது. உமை பார்ப்பதியென்னும் தேவி நாமங்கள் ஹிமவதியென்னும் நூலிற் காணக்கிடக்கின்றன. இது கேனோ உபநிஷத்தின் மூன்றும் அத்தியாயமாகும் பசுபதி, சர்வ, பவ, ஈஸான, மகாதேவ என்பன யஜுர் வேதத்தில் உரைக்கப்பட்டுள்ளன.

### சிவ வழிபாடு

ஆரியர்கள் மாத்திரமல்லர் அசுரர்களும மற்றுமுள்ளோரும் சிவத்தையே வணங்கினரெனப் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது முதல் இதிகாசமாகவுள்ள இராமாயணத்திலே கோசலா தேவி பரமசிவனை வேண்டி விஷ்ணுவின் அம்சமான இராமனைப் பெற்றாளென்று சொல்லப்பட்டிருக்கின்றது; இந்துமக்கள் பிராமணராகுக அல்லராகுக எல்லாரும் சிவத்தையே வணங்குதற்கு அருகராவர். இச் சிவவழிபாட்டைக் கொண்டு எல்லாச் சாதியினர்க்கும் சமயசுபாதீனத்தைக் கொடுக்கலாமென்பதே நான் உங்களுக்கு இப்பொழுது சொல்லத்தக்கது.

## பலஸ்ரயின் கலகம் அடங்கியபாடில்லை

8-6-36

பலஸ்ரயினில் அராபியருக்கும் யூதருக்குமிடையே நடக்குங் கலகத்தையும் அராபியர் கைக்கொண்டுள்ள வேலை நிறுத்தத்தையும் ஒழித்துச் சமாதானத்தை ஏற்படுத்தலாமென அங்கே சென்ற எமீர் அப்துல்லா அவர்களின் முயற்சி பிரதிகூலமுற்றது.

அவருடைய சொல்லை அராபியத் தலைவர் கேட்கவில்லையாம். பிருத்தானியர் இப்பொழுது கையாண்ட முறையைத் தவிர்த்து, அதாவது யூதரை அங்கே குடியிருத்தவேணுமென்ற நோக்கத்தை யொழித்துப் பழைய முறையிற் பரிபாலனஞ் செய்தாலன்றிக் கலகந் தணியுமென அராபியர் அப்துல்லாவுக்குத் தெரிவித்தார்களாம்.

அராபிய தலைவர் எழுவரை அதிகாரிகள் பிடித்து விளக்கமறியலில் இட்டிருக்கிறார்கள். யாபா நகரசங்கத் தலை நகர சங்க வேலைகள் சரிவரில் நடைபெறல் வேண்டும், வேலை நிறுத்தத்தை யொழித்துவிடல் வேண்டும இல்லையேல் நகரசங்கம கலைக்கப்படுமென்று அதிகாரிகள் எச்சரிக்கை செய்திருக்கின்றனராம்.

எகிப்திலிருந்து பின்னரும் ஒரு அணி பிருத்தானிய படை கலகத்தையடக்கும்படி வந்து சேருகின்றதாம.

பலஸ்ரயின் நகரத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

வேலை நிறுத்தியமையைத் தடுத்து பழையபடி வேலைசெய்விக்க முயற்சி செய்யவில்லையென்ற காரணம்பற்றி அப்பட்டினத்தலைவரை பிருத்தானிய கமிஷனர் பதவியினின்றும் விலக்கிவிட்டார்.

# இத்தாலியர் மாதர் நிலைமை

## அரசியலில் ஸ்திரீகள் கலந்து கொள்வதை முஸோலினி விரும்புகின்றிலர்

## சிசு உற்பத்திக்கு ஆதரவு

'ஹிந்து' பத்திரிகையில் ஜேனஸ் எழுதியதன் சாரம் வருமாறு:-

இத்தலியில் பாஸிஸ்டு கட்சியினர் அதிகாரத்தில் மாதர்க்குச் சுதந்திரம் கிடையாது நீங்கள், லண்டன், மாஸ்கோ முதலிய நகரங்களுக்குச் சென்றால் அங்கு ஸ்திரீ புருஷர்கள் இரு பாலாரும சமமாக நடத்தப்படுவதைக் காணலாம். ஆனால் ரோமபுரிக்கோ, நேப்பிள்ஸ் நகரத்திற்கோ சென்றால் அரசாங்க உத்தியோகங்களிலும் வியாபார ஸ்தலங்களிலும மருந்துக்குக்கூட ஒரு பெண் உத்தியோகத்திலிருப்பதைக் காணமாட்டீர்கள். இதில் ஆச்சரியமொன்றுமில்லை. பாஸிஸ்டு இத்தாலி ஆண்களால் ஆக்கப்பட்டு ஆண்களாலேயே ஆளப்பட்டு வருவது. பொது விஷயங்களிலோ, அரசியல் விஷயங்களிலோ தலையிட மாதர்க்கு அங்குச் சுதந்திரம் கிடையாது. இத்தாலிய மாதர்கள் தங்கள் உடலை வலுப்படுத்திக் கொள்ளவோ, தங்கள் அறிவை விரிவு படுத்திக் கொள்ளவோ சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. வெளிநாடுகளிலோ "பொது விஷயங்களில் தலையிடுவது எங்கள் பிறப்புரிமை'' என ஸ்திரீகள் வாதாடுகிறார்கள். இத்தாலிய மாதரோ வீட்டுக்குள் அடைபட்டுக்கிடக்கின்றனர்.

"ஒருவனுக்கு மனைவியாக இருக்கவும், அவனைச் சந்தோஷப்படுத்தவும், வீட்டு வேலை[illegible] செய்யவும், யுத்த காலங்களில் [illegible]தேவையான பிள்ளைகளைப் பெற்றுக் [illegible]காடுக்கவும்'' மாதர் இருப்பதா[illegible] பாஸிஸ்டு ஆண்கள் நினைக்கிறார்கள். அரசியல் விஷயங்களில் ஸ்திரீகள் கலந்து கொள்வதைப் பலமாக முஸோலினி எதிர்க்கிறார். பாஸிஸ்டு கட்சியிற் சேரப் பெண்கள் அனுமதிக்கப்படுவதல்லை

### கலியாணச் சட்டங்கள்

நாகரிகம் அடைந்துள்ள எந்த நாடும் பெண்களையும், ஆண்களையும் சமமாக நடத்துகிறது. ஆனால் இத்தாலியில் அப்படியில்லை. அந்நாட்டுப் பெண் ஆணுக்கு அடங்கிவாழவேண்டுமாம். இங்கிலாந்தில் புருஷன் மனைவியை அடிக்கலாகாதென்று சட்டம். இத்தாலியிலோ புருஷன் மனைவியை அடிக்கலாம். மனைவி தன் புருஷனிடமிருந்து ஓடிப்போனால் ஒரு வருஷச் சிறைத்தண்டனை அதற்காக விதிக்கப்படும். புருஷன் தன் மனைவியைக் கைவிட்டால்ஏனென்று கேட்பாருமில்லை. விவாகரத்து இத்தாலியில் கிடையாது.

### தாய்க்குச் சலுகை

ஆறாவது குழந்தை முதல் ஒவ்வொரு குழந்தை பெறும் தாய்க்கும் அரசாங்கத்தால வெகுமதியளிக்கப்படுகிறது. இத்தாலியில் கர்ப்பத்தடை கூடாது; கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்வோர் தண்டனை அடைவர். இங்கிலாந்தில் பெண்களின் கலியாணவயதை 21ஆக்கக் கிளர்ச்சி நடக்கிறது. பிரான்ஸில் சிறுவர் சிறுமிகளுக்குக் கலியாண வயது முறையே 15ம், 18ம்; ஜர்மனியில் மேற்படி வயதுகள் 18ம், 20ம. இத்தாலியிலோ ஆணுக்குக் கலியாண வயது 16; பெண்ணுக்கு 14. நிறைய பிள்ளைபெறுவதே தேசபக்தியெனப் பாஸிஸ்டு முஸோலினி நினைக்கிறார். பிள்ளை பெறுவதை எவ்விதம் கருதப்படுவாரெனச் சொல்லவேண்டுமா? இரண்டு வருஷங்களுக்கு முன்பு தனது 17வது குழந்தையைப் பிரசவித்த பெண்மணியை 'வீரப்பெண்' எனப் பத்திரிகைகள் கொண்டாடின. குழந்தைக் காட்சிகள் (Baby Exhibitions) ஏராளமாக நடைபெறுகின்றன. இத்தாலியிலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர் எல்லாரும் கலியாணம் செய்து கொள்ளவேண்டும். பெரிய குடும்பம் உள்ளவர்களுக்குத் தர்ம ஸ்தாபனங்கள் உதவி புரிகின்றன.

## கடிதம்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்களுக்கு
ஐயா,

### விசுவநாத சாஸ்திரியார்

வட்டுக்கோட்டையைச் சார்ந்த அராலிமேற்கு வாசரும், மாட்சிமை தங்கிய நான்காம் ஜோர்ஜ் மன்னர[illegible] "இராசாவின் கணிதர்'' என் [illegible] பட்டப்பெயர் அளிக்கப்பட்டவரும், நகுலமலைக்குறவஞ்சிநாடகம் வண்ணைக்குறவஞ்சி முதலிய நூல்களின் ஆக்கியோனுமாகி விளங்கிய விசுவநாதசாஸ்திரியார் அவர்களின் திவ்விய சரித்திரத்தை நான் எழுதத் தொடங்கியிருக்கிறேன். தமிழ்நாட்டினர் தங்களுக்குத் தெரிந்தவற்றைப் பத்திரிகை மூலமாகவேனும் அல்லது நேரிலே[illegible] வித்தால் மிகவும் கடமைப்[illegible]டையேன். இவரது பிறப்பு [illegible]ப்புத்தேதிகள், தனிப்பாடல்கள், கடிதங்கள், அவரைப்பற்றிய சாசனங்கள் வைத்திருப்போர் இச் சரிதம் எழுதும் வரையிலாவது கொடுத்துதவினால் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஓர் பெரியதொண்டு செய்தவராவார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

இங்ஙனம்
[illegible]. இராமலிங்கம்

வருமானவரி நிலையம்:
கொழும்பு.
8-6-36

## மகோற்சவம்

புராதன ஆலயங்களுள் ஒன்றாகிய புலோலிப் பசுபதீசுவரர் கோவிலில் இன்று துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறத் தொடங்கியிருக்கின்றது ஆனிமீ 12உ இரதோற்சவமும் அடுத்தநாளாகிய உதயதினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## ஐரோப்பிய மாது பௌத்த மதத்தைத் தழுவினாள்

இங்கிலாந்திலுள்ள கிராய்டன் என்னும் ஊரில் பிறந்து, தற்சமயம் அமெரிக்காவில் டாக்கோமா என்னும் ஊரில் வசித்துவரும் ஸ்ரீமதி ஸெனயான் பிராட் என்னும் ஆங்கில மாது, சிறிது காலத்திற்கு முன் பௌத்த மார்க்கத்தைத் தழுவி "டையூன்'' என்று தமது பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் 14 வயதுச் சிறுமியாயிருக்கையில் இவரது தந்தை பல மதங்களையும் பற்றிய நூல்களை இவரிடம் கொடுத்து, அவற்றைப் படித்த பின் எந்த மதம் சிலாக்கியமாகத் தெரிகிறதோ அதில் சேரும்படி கூறினார். இவர் பௌத்த மார்க்கமே தர்க்க ரீதியான மார்க்கம் என்று தேர்ந்து அம்மார்க்கத்தைத் தழுவியுள்ளாராம். இவர் அமெரிக்காவில் இந்த மார்க்கத்தைப் பரப்ப முயற்சி செய்வார்.

## பண்டித ஜவஹர்லால் பெரிய பணக்காரரா?

### தப்பபிப்பிராயம்

ஜவஹர்லால் நேரு பெரிய பணக்காரர் என்ற எண்ணத்தினால் 'நீங்கள் ஏன் சொந்தத்தில் ஒரு கார் வாங்கிக் கொள்ளக் கூடாது' என்று பலர் அவருக்குக் கடிதமெழுதினர். மற்றும் பலர் அவரை யாசகம் கேட்டுக் கடிதம் எழுதினர். அக்கடிதங்களில் அநேகம் சென்னையிலிருந்து கிடைத்தவை.

இதைக்குறித்து ஜவஹர் பின் வருமாறு எழுதுகிறார்:—

"எனக்குச் சொந்தத்தில் கார் வைத்துக் கொள்ளத்தக்க சக்தியில்லை. மேலும் எந்தச் சமயத்திலும் அரசாங்கத்தார் அதைப் பறிமுதல் செய்யலாம். தென்னிந்தியாவில் நான் ஏதோ பெரிய பணக்காரன் என்ற எண்ணம் பலமாக இருந்து வருவதாகத் தெரிகிறது அது மிகவும் தவறான எண்ணம்"

## "இணையற்ற எதியோப்பிய நக்ஷத்திரம்"

1ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வீரமாது. அபிஸீனிய சிற்றரசர்களில் ஒருவருடைய இளங்குமாரனொருவன் இவ்வீர மங்கைக்குக் காதலன். அவன் போர்க்களத்தில் மாண்டான். மங்கை சோகமுற்று, தானும் இறந்துவிடஎண்ணினள். ஆனால் அபிசீனியாவை விட்டுத் துறவு பூண்டு சென்ற சக்கரவர்த்தியார் இவ்வீர மாதையும் தன்னுடன் ஜெருசலத்திற்கு அழைத்துச் சென்றார்.

'விடுதலை'

## பலஸ்ரயின் கலகம்.

பலஸ்தீனிற் கலகம் பரவ அதிகப்படுகின்றது. ஹிப்றன் தெருவிதியிலுள்ள இரு பாலங்களைக் கலகக்காரர் உடைத்துப்பெயர்த்து விட்டார்கள். பிருத்தானிய படை 5 ஆவணியாக அங்கு வந்து நிற்பதையும் கலககாலத்திற்குரிய சட்டங்களெல்லாம் விதிக்கப்பட்டிருப்பதையும் கலகக்காரர் பொருட்படுத்தவில்லை.

### அபிஸீனிய சக்கரவர்த்தி

5-6-36

அபிசீனிய சக்கரவர்த்தியும் மூத்த குமாரனும் ரூஸ்காசா என்னுஞ் சேனாதிபதியும் அபிசீனிய மந்திரியும் இப்பொழுது லண்டன் நகரில் இருக்கிறார்கள். இவர்களுக்கு நல்ல உபசாரணைகள் செய்யப்படுகின்றன.

### லண்டனில் வசிக்கும் அபிஸீனிய பிரதிநிதி சொல்வது.

லண்டன் நகரில் வசிக்கும் அபிஸீனிய பிரதிநிதியாகிய டக்டர் மார்ட்டின் பின்வருமாறு "டைம்ஸ்" பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்:-

'அபிஸீனிய அரசு முழுவதும் இத்தலியர் கைப்பட்டு விட்டதென எண்ணிக்கொள்ள வொண்ணாது. இப்பொழுது ஒரு பகுதியில் அபிஸீனிய ராச்சியமே நடைபெறுகின்றது. இத்தலியரிடமிருந்து தாங்கள் இழந்த நாட்டை மீட்க வேண்டுமென்பதே அவர்கள் நோக்கம்; அதற்கான முயற்சிகளுஞ் செய்யப்படுகின்றன. மிகவும் ஈனமான முறையில் இத்தாலியர் அபிஸீனியரை வென்று நீதியீனமாக அவர்களுடைய நாட்டினைக் கவர்ந்தனர். இப்பொழுதுள்ள அபிஸீனிய அதிகாரிகள் எந்தக் கருமத்தையும் சக்கரவர்த்தி மூலமாகவே செய்யவேண்டியது தான் முறை. மேலும் அபிஸீனியர் பண உதவி படை உதவி விஷயங்களில் பிருத்தானியரையே அதிகம் எதிர்பார்த்திருக்கின்றனர்."

## சீன—ஜப்பான் தகராறு

### பேராசிரியர் சௌசா கூறியவை

5-6-36

வடசீனத்திற்கும் ஜப்பானுக்குமிடையே யுத்தத்திற்காகிய ஆயத்தங்களும் பாதுகாப்புக்களும் நடைபெறுகின்றன. விரைவில் இரு பகுதியாருக்கும் மாறுகப் போர் தொடங்குமென்று அரச தந்திரிகள் எவரும் எதிர்பார்க்கிறனர்.

"சீனதேசத்தில் சிறந்த ராசதந்திரியும் சர்வகலாசங்கத் தலைவருமாகிய பேராசிரியர் சௌசா என்பவர் தமது நாட்டிலிருந்து அமெரிக்காவிற்குப் போகும் மார்க்கத்தில் இப்பொழுது கொழும்பில் இறங்கியிருக்கின்றார்.

இவரை கொழும்பில் நடக்கும் தினவர்த்தமானிப் பத்திரிகையொன்றன் பிரதிநிதி கப்பலிற் சந்தித்துப் பேசியபோது இவர் பின்வருமாறு பதில் சொன்னாராம்.

'ஐயாயிரம் வருடத்திற்கு மேற்பட்ட சரித்திரத்தோடுகூடிய எங்கள் பெரிய நாட்டைப் புராதன சாதியாரைப் பகைவர் நிர்மூலமாக்கி விடலாகுமா? சீனம் இன்னமும் உலகத்திலே நிலவவேண்டுமானால் ஜப்பானை அடக்கவேண்டும்; படைப்பலத்தில் வல்ல ஜப்பானைச் சீனம் வெல்லமுடியுமோ வெனில் நல்லாய் முடியும்; சீனர்களாகிய நாங்கள் அதோகதியடைவோமானால் உலகம் முழுதும் அதோகதியுறவேண்டி வரும். ஜப்பானியர் ஒருபோதும் நீடித்த யுத்தத்தில் எங்களுடன் நிர்வகித்து நிற்றல் முடியாது ஜப்பானிய பொருளாதார விஷயமான இரகசியங்கள் எங்களுக்கு நன்றாய்த் தெரியும். அங்குள்ள விவசாயிகட்கிடையிற் பெருந்திருப்தியீனம் ஏற்பட்டிருக்கிறது. அல்லாமலும் சீக்கிரத்திலே ஒரு பூகம்பம் ஜப்பானிலே நிகழ அதனாற் பெரிய அழிவு நேரிடும்

அபிஸீனிய யுத்தத்திற்குப் பிறகு சர்வதேசசங்கத்திலே எங்களுக்கு நம்பிக்கை யில்லாமற் போய்விட்டது. எங்களுடைய கருமங்களை நாங்களே பார்க்கவேண்டும். ஸோவியத் ருஷியாவை நாங்கள் துணைக்கு எதிர்பார்த்திருக்கவில்லை; அவர்கள் தங்களுக்கு இஷ்டமானால் துணை செய்யலாம். நான் இப்பொழுது அய்ரோப்பாவுக்குப் போவது எங்களுக்குத் துணை புரியும்படி அய்ரோப்பிய தத்துவாசிரியர்களைக் கேட்பதற்கல்ல. ஜப்பான எங்கள் நாட்டிற்குச் செய்துவரும் அநியாயங்களை அய்ரோப்பியருக்கு விளக்கிக் காட்டுவதற்கேயாகும். ஜப்பானியர் எங்கள் விருப்பத்திற்கு மாறாக, கப்பல் கப்பல்களாகத் தங்கள் பொருள்களைக் கொண்டுவந்து இறக்குமதி செய்து எங்கள் நாட்டிற் புகுத்துகிறார்கள். இதனை அய்ரோப்பியர் உள்ளபடி அறியமாட்டார்கள். சீனத்தில் இப்பொழுது உள்நாட்டுக் கலகம் இல்லை. நான் முஸோலினியையும் ஹிட்லரையும் இப்பொழுது போய்க்காண்பேன்; இங்கிலாந்திற்கும் போய் விஷயங்களை அங்குள்ளாருக்கு விளங்கப்படுத்துவேன்.

### 200 ரூபா பெறுமதியான நகைத் திருட்டு

காம்பே நவாப் பேகத்திற்குச் சொந்தமான சுமார் ரூ 2500 பெறுமான நகை பம்பாய் அபாலோ பந்தரிலுள்ள ஒரு ஹோட்டலில் களவாடப் பட்டதாகப் போலீசாருக்குத் தகவல் எட்டியது. இவ்விஷயமாகப் போலீசார் ஓர் இந்த 'ஆயா'வைக் கைது செய்திருக்கின்றனர்.

# கன்னிகைமீது கந்தர்வன் காதல்!

## ஹைதராபாத்தில் நடந்த விசேஷ சம்பவம்

## கட்டியணைத்து முத்தமிட முயன்றதாம்; சுருட்டைமயிரைத் தொட்டுவிளையாடியதாம்

ஹைதராபாத், ஜூன் 3.

ஒரு கந்தர்வன் (தேவதை) ஒரு அழகிய சிறு முஸ்லீம் பெண் முன் தோன்றி வயது வந்ததும் அவள் தன்னைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று கேட்ட விசேஷ சம்பவம் இங்கு மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது அதன் விவரமாவது:—

மகமது இஸ்மாயில் என்ற மாஜி போலீஸ் சேவகன் சிதாரம் பேட்டையில் தான் 3 வருஷங்களுக்கு முன் வாங்கிய ஒரு வீட்டில் 6 வயதுள்ள தன் பெண்ணுடன் வசித்து வந்தார். புதிய வீட்டிற்குச்சென்ற சிறிது காலத்திற்கெல்லாம அந்தப் பெண்ணின் அழகு நாளுக்குநாள் அதிகரிக்க வாரம்பித்தது. அவளிடம் இருந்து ஒருவித வாசனை கம்மென்று வீசிக்கொண்டிருந்தது. இது தவிர, அந்தப் பெண் இருந்த அறைக்குள் அடிக்கடி பண ஓசை கேட்டது.

சமீபத்தில் ஒருநாள் இரவு இந்தப் பெண் படுக்கையிலிருந்து எழுந்து கூச்சலிட்டாள். உடனே அவளுடைய பெற்றோர்கள் அருகில் வந்து விசாரித்தனர். மிகவும் அழகான வாலிபனொருவன் தன்முன் தோன்றி, அறையில் ஒரு தங்க நாணயக் குவியலைக் காண்பித்து, வயது வந்தவுடன் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்தால் அத்தனையும் அவளுக்குக் கொடுப்பதாகக் கூறினனென்று பெண் பெற்றோர்களிடம் தெரிவித்தாள். அந்த வாலிபன் அவளை கட்டியணைத்து முத்தமிட முயன்றதாயும் அவளுடைய சுருட்டை மயிரைத் தொட்டு விளையாடியதாயும் அந்தப் பெண் கூறினாள்.

### இம்மாதிரிப் பல இரவுகளில் நடந்தது.

இஸ்மாயில் பயந்து பெண்ணுக்கு என்னநேருமோ வென்று கவலைப்பட்டுப் பொலிசரிடம் அறிவித்தார். பொலிஸார் விசாரணை செய்ததுடன் அந்தப் பெண்ணிடம் தேவதை காட்டிய புதையலைக் கண்டுபிடிக்கவும் முயன்றனர். ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் பொலிஸார் புதையலைத் தேடிக்கொண்டிருக்கையில் "அந்தப் புதையல் ஒருவரிடமும் அகப்படாது. அந்தப் பெண் அவளை நேசிக்கும் கந்தர்வனைக் கல்யாணம் செய்துகொள்ளும் போது அவளிடம நிச்சயம கொடுக்கப்படும்' என்று அசரீரி கூறியதாக அருகிலிருந்தவர்கள தெரிவிக்கிறார்கள்.

இஸ்மாயில் அந்த வீட்டைக் காலி செய்துவிட்டதுடன் பெண்ணையும் அதிக ஜாக்கிரதையாகக் காவல் புரிந்து வருகிறார்.

### வலிகாமம் வடக்கு ஆங்கில ஆசிரியர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் ஆதரவின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் நிகழும் வைகாசி மீ 22-ந் திகதி (4-6-36) வியாழக்கிழமைகாலை 6½ மணியளவில் சங்க அக்கிராசனர் ஸ்ரீமான் கா. சின்னப்பா அவர்களின் தலைமையின்கீழ் தெல்லிப்பழை மகாஜன ஆங்கிலவித்தியாசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது அத்தருணம் அரசாங்க சபை அங்கத்தவர் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை B. A. B. L. அவர்கள் "ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கல்வி முறை" என்னும் பொருளை பற்றியும், வித்தியாதரிசி ஸ்ரீமான் S. V. சோமசேகரம் அவர்கள் "வித்தியாசாலை கோமொழிக்க கோங்களில் கற்கத்தகும் கல்வி" என்னும் பொருள்பற்றியும் மிகவும் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். ஸ்ரீமான். நடேசபிள்ளையவர்கள் உலகம் போற்றித் துதிக்கும் வாசவியாகிய தாகூர் அவர்கள் விசுவபாரதி என்னும் சர்வகலாசாலையில் பிள்ளைகளுக்குப் பயிற்றிவரும் கல்விமுறைகளைப்பற்றி மிகவும் விரிவாகப்பேசினர். வித்தியாதரிசி அவர்கள் ஆசிரியர்கள் வித்தியாசாலை கோமொழிக்க கோங்களில் மாணவர்களை எவ்விதம் பயிற்றுதல் உசிதமென்றும், ஆசிரியர்கள் எவ்விதம் தமது அறிவு அநுபவங்களை அதிகரிப்பதன் பயனுக்குச் சில ஆங்கில ஆசிரியர்களைப் போல A (1) ஆசிரியர்களாய்வரத் தெண்டித்தல் வேண்டுமென்றும், இன்னோரன்ன பிற விஷயங்களைக் குறித்தும் தமது அறிவு ஆற்றல், அநுபவங்களின் பயனைக் கண்டு அறிந்து உணர்ந்த சில உண்மைகளை மிகவும் உற்சாகத்துடன் எடுத்துரைத்தனர். அதன்பின் அக்கிராசனர் சொற்பொழிவாளர்கள் குறிப்பிட்ட பிரதானமான விஷயங்களைப்பற்றிச் சில குறிப்புகள் கூறினர். ஸ்ரீமான் I. P. துரைரத்தினம் B. Sc. அவர்களும், ஸ்ரீமான் ச. சிதம்பரப்பிள்ளை ஆசிரியரவர்களும் பிரசாரகர்களுக்குச் சங்கத்தின்பேரால் நன்றிகூறியபின், சங்ககாரியதரிசி ஸ்ரீமான். தி செல்லத்துரை அவர்கள் கூட்டத்திற்குச் சமூகமளித்தோருக்குச் சபையைச் சிறப்பித்ததற்காகவும், மகாஜன வித்தியாசாலை முகாமைக்காரனுக்கு வித்தியாசாலை மண்டபத்தைக் கொடுத்து உதவிக் கூட்டத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்ததற்காகவும் நன்றி கூறினர். அதன்பின கூட்டம் 9 மணியளவில் நிறை வெய்தியது.

—நிருபர்.


கோடைகாலத்திற் பீடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக

ஒரு போத்தல்

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இதுவே

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

Y 44. 1-1—31-12-36)


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் திரிகோணமலை 7ம் நெம்பர் சின்னக்கடைத் தெரு பெரியதம்பி தம்பு செல்வவிநாயகம் & முருகுப்பிள்ளை மயில்வாகனம் இராசேந்திரம் என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப் படவேண்டிய நகைகளின் விபரம்.

1935ம் ஆண்டு 1ம் மாசம்

| இல. | உ. | ரூ. | ச. | நகைவிபரம். |
|---|---|---|---|---|
| A 1194 | 5 | 38 | 04 | கருகமணிச்சங்கிலி 1 |
| 1215 | 9 | 7 | 04 | இமிற்றேசன் கல் தோடு 1 |
| 1233 | 12 | 65 | 04 | தங்கக் கட்டிக் காப்பு சோடி 1 |
| 1240 | 13 | 7 | | செவ்வரத்தைத் திருகு 1 |
| 1265 | 20 | 8 | 04 | காட் 1 |
| 1283 | 26 | 12 | | பின்னைக்காப்பு 1 |
| 2ம் மாசம் | | | | |
| 1304 | 2 | 40 | | பொன் தாலிக்கொடி 1 |
| 1310 | 4 | 15 | | இமிற்றேசன் ஒப்பின் தோடு கூட்டம் 1 |
| 1342 | 12 | 94 | 44 | பெரிய கிரீடம் 1 சின்ன கிரீடம் 3 |
| 3ம் மாசம் | | | | |
| 1421 | 11 | 65 | 04 | வினாகாப்பு சோடி 1 |
| 1428 | 11 | 25 | 04 | செடிவேலை செய்த காட் 1 |
| 4ம் மாசம் | | | | |
| 1514 | 4 | 10 | 04 | கைவிலங்கு 1 |
| 1553 | 11 | 20 | 04 | அட்சரக்கூடு 1 |
| 1569 | 13 | 15 | | பதக்கம் 1 |
| 1585 | 18 | 23 | 04 | பெட்டி மோதிரம் 2 |
| 1600 | 22 | 8 | | பெட்டிமோதிரம் 1 |
| 1603 | 22 | 70 | | பொன் அச்சரக்கூடு கோத்த சங்கிலி 1 |
| 1628 | 29 | 35 | 04 | பின்னைப்பவுண் காப்பு சோடி 1 |
| 5ம் மாசம் | | | | |
| 1660 | 5 | 14 | 04 | கலாவளை மோதிரம் 1 |
| 1673 | 8 | 18 | 04 | புரூச் 1 |
| 1680 | 9 | 18 | | பின்கோர்க்கி பதக்கமுடன் கரிசமணிக் கோர்வை 1க்கு மணி 20 |
| 1687 | 11 | 190 | | சங்கிலித் தாலிக்கொடி 1 |
| 1703 | 14 | 20 | | பின் கோர்க்கியுடன் உட்கட்டு தாலித் தட்டு 9 |
| 1711 | 15 | 50 | 04 | மெழுகுடன் பட்டைக் காப்பு சோடி 1 |
| 1737 | 19 | 55 | 04 | முகப்புடன் பூக் காப்பு 1 |
| 1751 | 21 | 170 | | அரைஞாண் 1ம் அரைப்பவுண் 2ம் கோர்த்த கருகத்த சங்கிலி 1 பட்டக்காப்பு சோ. 1 |
| 1752 | 21 | 18 | 04 | கல் கவுதோர் 1 |
| 1753 | 21 | 9 | | பெட்டிமோதிரம் 1 |
| 1776 | 26 | 16 | 04 | சிறு கைச்சங்கிலி 1 கவர இல்லை |
| 1780 | 26 | 10 | 04 | குவளைக் கடுக்கன் சோடி 1 கவர இல்லை |
| 1792 | 30 | 6 | 04 | வெள்ளிப் பாதசரம் கூட்டம் 1 |
| 1797 | 31 | 10 | | இமிற்றேசன் வெள்ளைக்கல் தோடு கூட்டம் 1 |

விற்பனவு 1936ம் ஆண்டு தாதுவருஷம் ஆனிமாதம் 9ந் திகதிக்குச் சரியான (22-6-36) திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறரீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பெர். விசுவநாதஉடையார்,
வெத்தீஸ்மேஸ்தர்,
திரிகோணமலை,
3-6-36.

(Mis. 49 8 & 11-6-36.)

## யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது)

### விசேட மகாசபை

இந்த ஆனிமீ 27உ சனிக்கிழமை சாயுங்காலம் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி றேட்டிலுள்ள இச்சங்கத்துக் கந்தோர் 'மகாமண்டப'த்திலே ஒருவிசேட மகாசபைக் கூட்டம் நடைபெறும்.

விஷயம்.

30-9-35ல் நடைபெற்ற இச்சங்கத்து 17ம் வருடாந்தக் கூட்டத்தில் இச்சங்கப் பிரமாணங்களுள் வேண்டிய திருத்தங்கள் செய்தற்காக நியமிக்கப்பட்ட உபசபையார் செய்துள்ள திருத்தங்களையும் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளுதல்.

S. V. இராசசேகரம்,
அக்டிங் காரியதரிசி.

(Mis. 50. 8-6-36 to 15-6-36.)

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 25ம்ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆகலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1 11-35 to 31-10 36.) வி.



## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்னிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street, Colombo

Telephone No. 30.

(Y. 47. 8-2 36—7-2-37) வி



## இந்தியன் வங்கி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907] [வரையறுக்கப்பட்டது.

| தலைமை ஆபீஸ் | யாழ்ப்பாணக் கிளைஆபீஸ் |
|---|---|
| சென்னை (மெட்ராஸ்) | (பெரிய கடை) |

பொன் நகை, தான்யவகை இவைகளின் ஈட்டில் சகாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். எல்லாவகையான பணக் கொடுக்கல் வாங்கல் விஷயங்களும் இங்கே செய்து கொள்ளலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை யாழ்ப்பாணம் மானேஜரிடம் அறிந்து கொள்ளலாம்.

Q 290. 9-3 to 8-6-36 வி



## ஆரோக்கிய லேகியம்.

சிறந்த மலசுத்தி ஔஷதம்.

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை ஸ்கலிதம், நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை கால்சதி, குடைச்சல், நீக்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

### நீரழிவுக்கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி நுழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு சிட்டிகைப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஒரே நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.

ஸ்பெஷல் அநுபானம் சதாவரி லேகியம் ரூபா 4-00.

### தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இலவசம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அநுபானம் லேகியம் ரூபா 2-50.

வெளிநாட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 வி (Palni S. I.)



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஜாதிக், கஸ்தூரி, கோரோசனை, ஜாதிபத்திரி, சாலாமுஸ்லி, சப்பேமூஸ்லி, பிஸ்தான், சாரப்பருப்பு, பாதாம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபிரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், காம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் திருப்திகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூககவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாபிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

Y46 1-1-36 to 31-12-36) சிலோன்.



## கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்ரோட் (நரியன் குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திர சத்திரசிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர்
த இராமலிங்கப் வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y 26. 7-5-36 to 30-4-37 (வி)


## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ருபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.


## Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil.

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியைத் துர்ப்பிக்ஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை நீர்வடிதல், சதைபடர்வு, என்றும் சகல கண்வியாதிகளையும், கண்மயிர் உதிர்தல், தலை பொடுகு, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை கறுமையாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளியிலிருக்கும் ஏனைய போலிதைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்தெகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வளர்ந்துதிரிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H. 2. 20-3-36 to 19-9-36)


## பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் ரு. ச. | ஆங்கிலம் ரு. ச. | இருபிரதிகளும் ரு. ச. |
|---|---|---|---|
| (நகரசங்க எல்லைக்குட்பட்ட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-
ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ் மார்ட்"
89. கோவில்தெரு,
தம்பனித்தெரு.

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, June 11th 1936.